# மூன்றாம் சாமத்து புன்னகை



எம்.ரி.எம். யூனுஸ்

# மூன்றாம் சாமத்து புன்னகை

## எம்.ரி.எம். யூனுஸ்

- காத்தநகரான் -

இஸ்லாமிய இலக்கிய கழகம்
காத்தான்குடி

Pena
Publication

**மூன்றாம் சாமத்து புன்னகை**

■கவிதைகள் ■ ஆசிரியர்: எம்.ரி.எம். யூனுஸ் ■ © அனீஸா யூனுஸ் ■ முதற் பதிப்பு: 2017 ■வெளியீடு: இஸ்லாமிய இலக்கிய கழகம், காத்தான்குடி ■பக்க வடிவமைப்பு: எம்.ஏ.எம். அஸ்மி (075 7022680), ■அட்டைப்படம்: ஏ.ஏ.முஹமட் நாசிப் ■அச்சுப் பதிப்பு: ஏ.ஜே. பிரின்ட், தெஹிவளை, ■ பக்கங்கள்: 116, ■ விலை: 300/= ■ ச.த.நூல்.இல: 978-955-0932-26-9

**Moondraam Saamaththu Punnahai**

■Poems ■Author: M.T.M. Yoonus ■© Aneesa Yoonus ■First Edition: 2017 ■Publication: Islamic literature forum , Kattan kudy ■Layout Designed: M.A.M. Asmy (075 7022680) ■Cover: A.A. Mohamed Naashif ■Printed By: AJ Print, Dehiwela ■Page: 116, Price: 300/=, ❖ ISBN: 978-955-0932-26-9

Pena Publication

# மூன்றாம் சாமத்து புன்னகை

*எம்.ரி.எம். யூனுஸ் (1983)*

- *இயற்பெயர் : முஹம்மது தாஹிர் முஹம்மது யூனுஸ்*
- *கிழக்கிலங்கை மட்டக்களப்பு மாவட்டத்தின் காத்தான்குடியில் முஹம்மது தாஹிர் - சீனத்துல் முனவ்வறா தம்பதிகளின் புதல்வராகப் பிறந்தவர்.*
- *2000ம் ஆண்டு நவமணி பத்திரிகையில் பிரசுரமான "அவலங்கள்" கவிதையின் மூலம் இலக்கிய உலகில் அறிமுகமானவர்.*
- *2002ம் ஆண்டு "யாத்ரா" சஞ்சிகை இலங்கை, இந்தியா எழுத்தாளர்களுக்கிடையில் நடாத்திய கவிதைப் போட்டியில் சிறப்புப் பரிசினையும்,*
- *2002 இல் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை தேசிய ரீதியில் நடாத்திய கவிதைப் போட்டியில் இரண்டாமிடத்தினையும்,*
- *2003 ஆம் ஆண்டு அஷ்ரப் நினைவு மன்றம் நாடளாவிய ரீதியில் நடாத்திய போட்டியில் 3ம் இடத்தினையும்,*
- *2006 ஆம் ஆண்டு "விபவி" இளம் எழுத்தாளர்களுக்கான படைப்பிலக்கியப் போட்டியில் சிறப்புப் பரிசினையும்,*
- *அரச இலக்கிய கலை பெருவிழாவின் பொருட்டு வருடா வருடம் நடாத்தப்பட்டு வரும் பிரதேச, மாவட்ட, தேசிய கவிதைப் போட்டிகளில் 1ம், 2ம், 3ம் இடங்களையும் பெற்றவர்.*
- *2012ம் ஆண்டு பிரதேச கலாசார விழாவின் போது இலக்கிய பங்களிப்பிற்காக "இளங்கதிர்" பட்டமும்,*
- *2016ம் ஆண்டு காத்தான்குடி இஸ்லாமிய இலக்கிய கழகம் நடாத்திய இலக்கிய விழாவில் "கவித்தென்றல்" பட்டமும் வழங்கி கௌரவிக்கப் பட்டார்.*
- *தேசிய, சர்வதேச நாடுகளிலிருந்து வெளிவரும் பத்திரிகைகளிலும் சஞ்சிகைகளிலும் இணையத்தளங்களிலும் கவிதைகள், கட்டுரைகள், சிறுகதைகள், நூல் விமர்சனம் போன்றவற்றை காத்தநகரான், இளைய நிலா, இளமதி ஆகிய புனைப்பெயர்களில் இற்றைவரை எழுதி வருகிறார்.*

297/35, பிர்தௌஸ் நகர்,
புதிய காத்தான்குடி - 02,
அலைபேசி: 0779345640,
ஈமெயில் : Yoonusmtm@gmail.com

*மூன்றாம் சாமத்து புன்னகையை தன் தூரிகையால் வசப்படுத்தி, எந்தன் உணர்வுகளுக்கு ஏற்றாற் போல, அட்டைப்படம் வரைந்த ஓவியர் ஏ.ஏ. முஹமட் நாசிப் - என் உருவத்தை தூரிகை வீச்சில் பிரதிபடுத்திய கலைஞர் ஏ.ஒ. அனல் - நூலுக்கு மனமுவந்து உரைகளை வழங்கிய கலாநிதி றமீஸ் அப்துல்லா - கவிஞர் ரீ.எல். ஜவ்பர்கான் - கவிஞர் நிந்த மணாளன் (ஏ.எல். அஷ்ரப்) - அட்டைக் குறிப்பைத் தந்த கிண்ணியா சபறுள்ளாஹ் - வாழ்த்துப் பா வழங்கிய கவிஞர் வில்லூரான் (க. முரளிதரன்) - செவ்வை பார்த்த சகோதரி ஏ.எல். பாத்திமா மின்ஹா - பக்க வடிவமைப்புச் செய்த எம்.ஏ.எம். அஸ்மி - பேனா பதிப்பக உரிமையாளர் ஜே. பிரோஸ்கான் - அச்சுப் பதித்த ஏ.ஜே. பிரிண்டர்ஸ் - காத்தான்குடி இஸ்லாமிய இலக்கிய கழகத்தினர் - என் நெஞ்சுக்குள் வலதும் இடதுமாக வாழுகின்ற எம்.எம்.எம். மர்சூக் - எம்.எம்.எம். நௌபர் - விஷேடமாக என் இன்ப, துன்பங்களில் இரண்டறக் கலந்து பயணிக்கும் என் அன்புத் துணைவி அனிஸா பானு மற்றும் குடும்பத்தாருக்கும் என்னில் நேசமாய் இருக்கும் எல்லோருக்கும்.*

மற்றும்

**அவ்வப்போது என் ஆக்கங்களை பிரசுரித்த தினகரன் வார மஞ்சரி - வீரகேசரி வார வெளியீடு - விடிவெள்ளி - தமிழ் Mirror - நவமணி - தினக்குரல் - தினமுரசு - மித்திரன் வார மலர் - மெட்ரோ News - படிகள் - போது - விருந்து - எறும்புகள் - நீங்களும் எழுதலாம் - காற்றுவெளி - மலைகள் நன்றிகள் கோடி.**

**இது...**

என்னை
உருப்படியாக்கி...
பாசத் தேனூற்றி
வார்த்தெடுத்த
கதீஜா உம்மாவுக்கு...
“மூன்றாம் சாமத்து
புன்னகை”
**சமர்ப்பணம்.!!!**

# வெளியீட்டுரை

*ஈழத்து இலக்கிய உலகம் 2000ம் ஆண்டுகளுக்குப் பின்னர் பல கண்டு கொள்ளத்தக்க நல்ல பேனாக்காரார்களை அடையாளப்படுத்தியுள்ளது.*

*அந்த அடையாளப்படுத்தலின் குறிப்பிடப்படக்கூடிய அறுவடைதான் காத்தான்குடி தந்த கவிஞர் எம்.ரி.எம். யூனுஸ்.*

*அண்மைக் காலமாக நிமிர்ந்து பார்க்கக் கூடிய கவனிக்கத்தக்க கவிதை களை எழுதி வருபவர்.*

*கவிஞர் யூனுஸினுடைய "மூன்றாம் சாமத்து - புன்னகை" கவிதைத் தொகுதி காத்தான்குடி இஸ்லாமிய இலக்கிய கழகம் வெளியிடும் 9 வது வெளியீடாகும்.*

*இளம் படைப்பாளிகளை அடையாளம் கண்டு அவர்களை வளப்ப டுத்தும் பணியில் இஸ்லாமிய இலக்கிய கழகம் வெற்றி பெற்றிருப்பதற்கு யூனுஸின் கவிதைத் தொகுதி வெளியீடும் ஒரு உதாரணம்.*

*மேலும் பல நூல்களைத் தர வல்ல இறைவனை பிரார்த்திக்கின்றோம்.*

இஸ்லாமிய இலக்கிய கழகம்
ரீ.எல். ஜவ்பர்கான்,
தலைவர்.

காத்தான்குடி பாத்திமா,
செயலாளர்.

# காத்தான்குடி இலக்கியப் பாரம்பரியத்தில் இன்னுமொரு கதியால் காத்தநகரான் எம்.ரி.எம். யூனுஸ்

■ கலாநிதி றமீஸ் அப்துல்லா

*ஈழத்துத் தமிழ்க்கவிதைப் பரப்பில் கிழக்கிலங்கைக்கு ஒரு தனி இடமுண்டு. அதிலும் குறிப்பாக முஸ்லிம்களின் இலக்கியப் பங்களிப்புக் குறித்துச் சிந்திக்கின்ற போது காத்தான்குடிக்கு ஒரு முக்கியமான இடமிருக்கிறது. பழைய வாய்மொழிப் பாடல்களிலிருந்து இன்றுவரை பெரிதும் ஒரு வர்த்தக சமூகமாகவே காத்தான்குடி முஸ்லிம்கள் அறியப்பட்டிருக்கிறார்கள். ஆனால், அந்த நகருக்கு ஒரு சிறப்பான சமூக, அரசியல், இலக்கிய, கல்வி, சமய, காலாசாரப் பாரம்பரியமுண்டு என்பதனை யாராலும் இலகுவில் மறுத்துவிட முடியாது.*

*கிழக்கிலங்கைக் கவிதைப் பாரம்பரியத்தில் ஒரு திருப்புமுனையைக் கொண்டு வந்ததில் கவிஞர் அப்துல் காதர் லெப்பைக்கு ஒரு முக்கியமான பங்கு இருக்கிறது. சமயத்தையும் பண்பாட்டையும் நவீன உலகிற்குள் இழுத்து வந்த பெருமை அவருக்கு இருக்கிறது. அவ்வாறு காத்தான் குடியின் இலக்கியவாதிகளுக்கு இலக்கியப் பரப்பிலே பேசப்படத்தக்க தனியான வரலாறு இருக்கிறது. அந்த வரலாற்றுக்கு இன்னுமொரு கதியால் ஆக காத்தநகரான் யூனுஸ் என்ற கவிஞர் வந்திருக்கிறார்.*

*“நமக்குத் தொழில் கவிதை” என்று இன்று நம்மில் பலர் கவிதை எழுதுகின்றவர்களாக இருப்பது மிக்க மகிழ்ச்சி தருகின்றது. இந்த உள்ளம் எல்லோருக்கும் வாய்ப்பதில்லை. எல்லோரும் எழுதுவது கவிதையாகுவதுமில்லை. கவிதை தன் மன உணர்வுகளின் வடிகாலாக அமைந்து விடுகிறது என்பதைத்தான் நண்பர் காத்தநகரான் எம்.ரி.எம். யூனுஸ் தன் முன்னுரையில் குறிப்பிட்டிருக்கின்றார்.*

அவர் குறிப்பிடுவது போன்று அவரது மன உணர்வுகளையும் சமூக அவலங்களையும் வெளிப்படுத்துவனவாக அவருடைய பெரும்பாலான கவிதைகள் அமைந்திருக்கின்றன. கவிதை எழுத வேண்டும் என்பதற்காக எழுத முடியாது. உணர்வுகள் கொதிநிலையாகிற போதுதான் கவிதை யோடு பேசுவதாகக் காத்தநகரான் சொல்கிறார்.

“மூன்றாம் சாமத்து - புன்னகை“ ஆக வரும் இந்தத் தொகுதியின் முதல் கவிதையான “தேகக் கூட்டில் அடைபட்ட ஆன்மா” ஒரு நல்ல பதிவுதான். தத்துவ விசாரமிக்க இந்தக் கவிதை நமது இளம் கவிஞர்களிலிருந்து யூனுஸை வேறுபடுத்துவதுபோல் தெரிகிறது.

யூனுஸ் சொல்வது போல அவர் காண்பதுவும் கேட்பதுவும் கவிதை யாகியே இருக்கிறது. வீதியில் காணும் பசுவும் வீட்டில் காணும் குழந்தையின் மொழியும் கவிதையாகியே இருக்கிறது. இதுபோன்று நாம் கொஞ்சக் காலத்திற்கு முன்னர் அனுபவித்த மனிதனைக் கொல்லும் அந்தக் காலத்தின் குரல்களும் “தொப்பித் தலைக் குரங்கும் சாரம் கட்டிய குண்டர்களும்“ ஆக வந்திருக்கிறது. இதனைப் பார்க்கின்ற போது நமது சமூகத்தின் எல்லாக் குரலாகவும் யூனுஸ் திகழ்ந்திருக்கிறார் என்பதைத்தான் காணமுடிகிறது.

“அஞ்சலுக்கு மாநாடு நடாத்தும் தலைகள்” நமது அரசியலின் - அரசியல் வாதிகளின் போலித்தனத்தை வெளிப்படுத்துகிறது. ஒரு எழுத்தாளனால் மாத்திரமே உண்மையை வெளிப்படையாகச் சொல்ல முடியும். அந்த வெளிப்படைத் தன்மையும் ஆத்திரமும் இந்தக் கவிதையில் கொட்டித் தீர்க்கப்பட்டிருக்கிறது. “தவளைகளின் பாய்ச்சல்” நமது அரசியலில் உள்ள ஆத்திரத்தை உச்சஸ்தாயில் வெளிப்படுத்துகின்ற கவிதையாகும். “முத்திப் பெருத்த மரம்” என்ற கவிதையும் விரும்பினால் அரசியலுக்குள் வைத்துப் பார்க்கக் கூடியதுதான்.

“மூப்பின் மீதான போராட்டம்“, “வேதனையில் ததும்பிய சுமை வண்டி”, “குளறுபடியில் சிக்கிய வாழ்வு“ இவையெல்லாம் நம்மைச் சூழ்ந்தி ருக்கின்ற அனுபவ உண்மைகளை வெளிப்படுத்துகின்ற கவிதைகள். “புணர்தலின் கொடுமை” விரச பாணியில் சொல்லப்பட்டிருக்கின்ற போதையின் கொடுமையாகும். இதுபோன்று சமூக அவலங்களைச் சொல்கின்ற பல கவிதைகளை இந்தத் தொகுதியில் காணலாம். அவை கேலியும் கிண்டலுமாக வருகின்ற அதே நேரம் ஆத்திரமிக்கதாகவும்

*கொப்பளித்திருக்கின்றன.*

*இறுதியாக "மூட்டை கட்டிய மேகம்", "காற்றைக் கிழித்த மழைச் செண்டு" இயற்கையோடு கூடிய கற்பனை வளமிக்க கவிதைகளாகின்றன.*

*"ஓவியனால் வசியம்*
*செய்யப்பட்ட தூரிகையில்*
*ஒட்டிக்கொண்ட*
*வர்ணப்பூச்சுகளை துரத்திட ....*
*வீசப்பட்ட தூசுகளின்*
*துண்டங்கள் ....*
*அப்படியே கருமேகமாக*
*தொங்கி தம்பட்டம் புரிகிறது" !!*
*(காற்றைக் கிழித்த மழைச் செண்டு)*

*கவிதை உள்ளம் படைத்த காத்தநகரான் எம்.ரி.எம். யூனுஸ் தனது மன உணர்வுகளையும் கற்பனை ஆற்றலையும் கிராமத்து மொழியிலும் புதிய சொற்களிலும் ஆக்கிப் படைத்த இந்த விருந்து இனிவரும் காலத்தில் இன்னும் காத்திரமாகச் சிறக்க வேண்டுமென்று மனதாரப் பிரார்த்திக்கிறேன். கற்பனா சக்தியும் இயற்கையின் பிடிப்பும் சமூகத்தின் கவர்ச்சியும் கவிதைகளை ஆக்கும் என்றாலும் அகன்ற வாசிப்பும் ஆழ்ந்த ஞானமும் நல்ல கவிதைகளைக் கொண்டுவரும். காத்தநகரான் யூனுஸூக்கு என்றும் ஆசிகள் உண்டு.*

## காயங்களை கவிதைகளாக்கும் யூனுஸின் இறக்கை

■ ரீ.எல். ஜவ்பர்கான்

கவிதைகள் நெய்யப்படுவதில்லை அதேபோல் செய்யப்படுவது மில்லை. அவ்வாறுதான் கவிஞனும் கவிதைகளும் உற்பத்தியாவது மில்லை உருவாவதுமில்லை. கவிதையும் கவிஞனும் தான்படுவான் என்பது எனது வாதம்.

கவிஞனை அவன் வாழும் சூழலும் அதன் வடுக்களும்தான் பெற்றெடுக் கின்றன. அவ்வாறில்லாமல் உருவாக்கப்படுகிறான் என்பதோ அல்லது உற்பத்தியானான் என்பதோ சடத்துவவாதம்.

அந்தவகையில் சூழலும், காயங்களும் உருவாக்கிய கவிஞனாக எம்.ரி.எம்.யூனுஸைப் பார்க்க முடிகின்றது.

நவீன ஊடகங்களின் வருகை பல செயற்கைத்தனமான படைப்பாளிக ளெனச் சொல்லப்படுவோரை வலிந்து உருவாக்கியுள்ள இன்றைய சூழலில் மேலே சொன்ன தான்படுவான் பட்டியலில் கவிஞர் யூனுஸூம் இணைவது காண மனம் மகிழ்வு கொள்கிறது.

காத்தநகரான் யூனுஸ் நீண்ட காலமாக இலக்கியத்துறையில் பல்வேறு பரிமாணங்களுடன் தொடர்புபட்டு எழுதிவருபவர். இலக்கியத்தையும் எழுத்தையும் ஆத்மார்த்த ரீதியாக நேசிப்பவர். நல்ல தேடல் மிக்க இளம் படையல்வாதி. எங்கெல்லாம் இலக்கிய நிகழ்வுகள் நடக்கின்றனவோ அங்கெல்லாம் தனது இருப்பையும் தக்கவைக்கத் தவறாதவர்.

வாழ்வில் பல காயங்களுடன் பயணத்தைத் தொடர்ந்தவர். சோகம் என்பது அவருக்குள்ளேயே தங்கியிருக்கத்தக்க ஜீவியத்திற்கு அவர் சொந்தக்காரர். அதனால்தான் காயங்களைப் படையலாக்க கற்றிருக்கி றார். நீண்டகாலமாக எழுதிவரும் யூனுஸ் தனது முதலாவது படையல் களின் பொட்டலத்தை நமக்குத்தருவது இன்னும் மன நிறைவு.

மூன்றாம் சாமத்து - புன்னகை அவரது முதல் புத்தக பிரசவத்தின் மகுடம். புதுசா, மரபா என்ற வாதப் பிரதிவாதங்களுக்கிடையே யூனுஸ் தனது உணர்வுகளை வித்தியாசமான கவிதை வடிவில் சொல்வது வரவேற்கத்தக்கது.

*பல்வேறு உணர்வு ரீதியிலான படைப்புகள் இந்நூலில் காணக்கிடைக் கிறது.*

*இதில் தேகக் கூட்டில் அடைபட்ட ஆன்மா கவிதையில்*

*"கூசாவில் அடைக்கப்பட்ட*
*வெள்ளை ஆன்மா…*
*இறைவனின்*
*சன்னிதானத்திற்குப்*
*பறந்து சென்றிருக்கிறது"…*
*எனத் தொடங்கி*
*"தேகக் கூட்டில்*
*அடைபட்ட பறவை…*
*பொய்த் தூக்கங்களோடு*
*பொய்யா மொழியை*
*உசுப்பேற்றி…*
*தனித்து வாழும்*
*மண்ணறையில்…"*
*என முடிக்கிறார்.*

*இக்கவிதை அவரது நூலில் ஒரு பதச் சோறாகக் காணப்படுகிறது. மனிதனுடைய வாழ்க்கை எங்கே ஆரம்பித்தாலும் மரணத்தில்தான் போய் முடியுமென்பதை தனது சிந்தனா சக்தியூடாக சொல்வது சிறப்பு. மரணம் பற்றிப் பாடாத கவிஞர்களே கிடையாது. அந்தவகையில் அதிலும் யூனுஸ் தன்னையும் இணைக்கிறார்.*

*பாவப்பட்ட பாவையின் மனசு என்ற மற்றொரு கவிதை… இன்றைய சூழலில் திருமண வயதைத் தாண்டியும் வாழ்க்கைக்குள் நுழைய முடியாமல் ஏங்கித் தவிக்கும் பெண்கள் ஏராளம். குடும்ப சூழல் முதல் வறுமை, சீதனம் இத்தியாதிகளால் தொடர்ந்தும் வாழா வெட்டிகளாகத் தவிக்கும் ஒரு பேதையின் ஏக்கத்தை கவிதையாக்கி வெற்றி காண்கிறார் கவிஞர். அக்கவிதையில் ஓர் அடியில்*

*"கொதித்து வற்றிய*
*உணர்வுக் கிடக்கையதை*
*உருட்டிப் பார்க்கையில்…*
*நூறு பாகையில் உலர்ந்து*

*நாற்பதோடு தவண்டு...*
*ஏறிக் கொள்கிறது*
*வெள்ளைப் பூச்சு தலையில்..."*
*இந்த வரிகள் இதயத்தை கனக்கச் செய்கிறது.*

*இப்படி சமூகம் சார்ந்த, சமூகத்திலே காணுகின்ற அவலம் நிறைந்த வாழ்க்கையை கவிதைகளாகச் சொல்ல முற்படுவதுதான் அவரது கவிதைகளின் வெற்றியென துணிந்து சொல்லலாம்.*

*பொத்துக்கொண்டு வழிந்த நீர்!!!*
*ஊமையாகிய கொச்சைத் தமிழ்!!!*
*ஆகிய கவிதைகளும் சிறப்பே...*

### *தீப்பொறியைக் குடித்த குட்டிப் பிசாசு.!!!*

*குர்ஆனைப் போர்த்திய*
*குட்டி தேசத்தின்*
*குரல்வளையில்*
*கையைப் புதைத்து*
*சல்லாபம் புரிகையில்...*
*சரிந்து போனது*
*சரித்திர தேசம்.!!*

*குமருகளின் பூ மேனியில்*
*நீ பூசை நடாத்தி*
*குடும்பம் நடாத்துகையில்...*
*எங்களது*
*உணர்வுகள் உசும்பி...*
*கண்ணீரைக் கட்டியாக*
*கிலோக் கணக்கில் தள்ளி*
*கொந்தளித்தது நெஞ்சம்.!!*

*இதய தேசத்து முனகல்களை*
*கேட்டுக் கேட்டு சலித்துப்போன*
*காதுகளை பிடிங்கியெறிகையில்...*
*கைகள் கட்டப்பட்டு*

*திரைச்சீலை நீக்கி*
*இச்சையடக்கிப் பாய்கையில்...*
*அத்தனை விம்மல்களையும்*
*அடர்ச்சியாக்கிய மேலாதிக்கத்தில்..*
*நீ நடித்த நாடகங்கள்*
*நெஞ்சத்தில் குத்தியது.!!*

*உந்தன்...*
*தேசத்தில் ஊறிய*
*தீப்பந்தத்தைக் குடித்து*
*நீந்தியதில்...*
*உம்மாக்களின்*
*முகங்கள் சிவந்து*
*எதை எதையோ*
*உதடுகள் உச்சரித்துப் போயின...*
*குட்டிப் பேய்க் காற்றின்*
*வக்கீரத்தை சுட்டெரித்து*
*சுவை கருகியதில்.!!*

*இனி...*
*நீ - ஆடும் ஆட்டங்கள்*
*அத்தனையும் அடங்கி...*
*சுதந்திரக் காற்று*
*சுதந்திரமாய் விழும்*
*பலஸ்தீன் மண்ணில்.!!!*

*இக்கவிதை பலஸ்தீன் மக்களுக்கெதிராக சியோனிசம் நடாத்தும் அட்டகாசத்தைக் கண்டு குமுறும் கவிஞனின் கண்ணீர். அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்கெதிராக கொதித்தெழாத கவிஞனின் ஆத்மாவும் ஆத்மாவா? அந்த வகையில் பற்றி எரியும் பலஸ்தீனப் பிரச்சினையையும் கவிஞர் கண்டு வெதும்புவது கவிஞனின் உணர்வின் வெளிப்பாடு.*

*கூட்டமாகக் கூடி துவேசத்தை தும்மல் என்ற கவிதையில்*
*“தொப்பித்தலை காக்காமாரின்*
*தொல்லைகளால்...*

*வழுக்குத்தலைக் குச்சிகளின்*
*போதனைகள் அறுபடுவதாக*
*துவேச முத்திரை குத்தி...*
*வீதிப் பலகையை இழுத்து*
*நெருப்போடு நகர்கிறார்கள்...”*

எனும் வரிகளூடாக அண்மைக் காலத்தில் இலங்கையில் முஸ்லிம் (இன்று மியன்மாரிலும்) சமுகத்திற்கெதிராக சில பௌத்த தீவிரவாதி களால் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ள மத ரீதியிலான நிந்தனைகளைச் சாடியுள்ளார். நேரடியாக அன்றி கவிஞனுக்கே உரிய பொடி வைக்கும் பாணியில் கவிதையை நகர்த்தியுள்ளமை வரவேற்கத்தக்கது.

இப்படி வாழ்வியலின் ஒவ்வொரு அசைவுகளையும் கவிஞர் கவிதையாக்கி இருப்பதுதான் இந்நூலுக்குக் கிடைத்த சிறப்பு எனலாம் ஆயிரக்கணக்கில் கவிதைகளை எழுதித் தள்ள வேண்டுமென வலிந்து சோலைகளுக்குள்ளும், சிகரட்டை ஊதிக் கொண்டும், ஊஞ்சலாடிக் கொண்டும் கற்பனை செய்யும் மேதாவிக் கவிஞர்களுக்குள் நடப்பு விவகாரங்களை, சமூகம் சார்ந்த விடயங்களை, மனப் பாதிப்புகளை, தேசிய சர்வதேச ரீதியில் ஏற்படுத்திய உணர்வுகளை கவிதைகளாக்கி இருப்பது திருப்தி.

அதுதான் கவிதை. கவிதையென்றால் ஏதோ ஒருவகையில் அதிர்வுகளை ஏற்படுத்த வேண்டும். இல்லாவிட்டால் அது வெறும் ஜடமாக மாறிப்போகும். எந்தக் கவிதை வாசகனிடம் அல்லது ரசிகனிடம் சென்று தாக்கத்தை உண்டுபண்ணவில்லையோ அது தோற்றுப் போனவையாகவே கருதப்படும்.

அந்த வகையில் கவிஞர் யூனுஸ் வாசகனின் ஆத்மாவை கடைந்தெடுக் கிறார். நல்ல பல கவிதைகள் இத்தொகுதியில் உள்ளன என்பதை துணிந்து கூறலாம்.

யூனுஸின் ஒவ்வொரு இலக்கிய நகர்வுகளுடனும் எனக்கு நெருக்க முண்டு என்பதால் எதிர்காலத்தில் நிச்சயம் இவன் பேசப்படும் கவிஞனாவான் என்பது திண்ணம்.

இதைவிடவும் கனதியான பல நூல்களைத் தர வல்ல நாயன் ஞானத்தை விதைக்க பிரார்த்திக்கின்றேன்.

## அனுமானத்திலிருந்து... உரை கொண்டதில்...

■ நிந்த மணாளன் (ஏ.எல்.அஷ்ரப்)

*எழுதிக் குவிந்த விந்தைச் சொற்களை உயிர் வேராகக் கூட்டி... காத்தநகரான் எம்.ரி.எம். யூனுஸ் எனும் இளம் கவிஞன் செய்த "மூன்றாம் சாமத்து - புன்னகை" என்ற சாமம், என் நெஞ்சத்துக் கூட்டில் கூட்டி வந்து விட்ட வார்த்தைத் தாக்கங்களின்... மின்னல் இம்மட்டு... அபாரமென மொழிய வைத்த தருணம் வியப்பு.*

*முதல் நகலாக... நகரப் புறப்பட்ட இச்சாமத்துக் கவிகளில் ஊடி அனுபவப்பட்ட வாழ்வியலின் "படிப்பு அடி" என்பது... பல படிகளில் நின்று அவரோடு பேசுகிற அனுபவம் என்பது யோசிக்க வைக்கும் சைகையை... மௌனமாகப் புதைத்து விட்டுச் செல்கிறது என்னில்.*

*காத்த மண்ணிலிருந்து எழுதப் புறப்பட்ட சிட்டுக்களிலிருந்து சிறக டிக்கும் கவிஞர்களில் ஆகாயத்திலிருந்து இவர் சிறகடிக்கும் சப்தம் என்பது... ஒரு அர்த்தஸ்வரத்தின் அஸ்த்திவாரம் என்றால் மிகையாகாது.*

*இலகும் கடினமுமற்ற படிமப் பிரயோகம் புகுந்த, அமிர்த சொற்களின் கூடு கவிதையின் மெருகை கட்டை விரல் பிடித்துக் காட்டுகையில் நட்சத்திரங்களை நடுகையிட்ட பிரகாசம் வாசிப்பின் தொடக்கத்தி லேயே இலங்குவதை அவதானிக்க முடிகிறது.*

*பொத்துக் கொண்டு வழிந்த நீர் என்ற தலைப்பிலான கவிதையில் வரும்..*

*"சுவைத்தலென்ற*
*சாதிப்புக்குள்*
*இத்தனை நோக்காடு*
*தாய்மைக்குள்*
*இருக்குமென*
*குட்டிப்பசு அறிந்தபாடில்லை…"*

*ஆம், வலிகளின் நோவினை குறித்தும் அறிந்திடாத வலியினை தொட்டெழுதிய வரிகள் அவர் கொண்ட பொறுப்பை எம்மில் ஒப்புவித்துள்ளார். தாம் தேனீ போல் சேர்த்த கவிகளின் இனிப்பி லிருந்து… தேசியப் பத்திரிகையில் பிரசுரித்து வெளிவந்தவைகளின், சில சேர்வைகளையும், இதில் பிரசன்னம் செய்திருந்ததிலிருந்து… கர்ண… கடூர… வார்த்தை ஜாலமென்பது நவீனப்படுவது தனித்து காத்தநகரான் பெறுமானக் கவிஞனென உரத்துக் கூறுகின்றது.*

*அது போல் (பின்வரும்) காற்றைக் கிழித்த மழைச் செண்டு - என்ற கவிதையின்..*

*"ஓவியனால் வசியம் செய்யப்பட்ட*
*தூரிகையில் ஒட்டிக் கொண்ட*
*வர்ணப் பூச்சுக்களை துரத்திட*
*வீசப்பட்ட தூசுகளின் துண்டங்கள்*
*கருமேகமாகத் தொங்கி*
*தம்பட்டம் புரிகிறது…"*

*வான மேகத்தின் கோலத்தினை அதை வரைய வார்த்தவனின் தூரிகையினை வசியம் ஒட்டிக் கொண்டதாக விபரிக்கின்றது தனியழகு. விசால மனத்திரையில் நெளிகின்ற கற்பனையின் இதமான சொற்கள்… பஞ்ச நிலமையினி ஏது என்ற தமிழ் வளம் இன்னும் போகப் போக அத்துப்படியாகலாம் கவிஞர் யூனுஸ் அவர்களுக்கு.*

*மேலும்,*
*ஆண் பனைக் கூடு*
*சந்திக்கு வந்த போலிக் காகங்கள்*
*வேசம் அறுத்த வனத்தின் வரைபு*

*போன்ற கவிகளின் சொற் கூட்டம் சொல்லும் சேதிகள், கவனிப்பை பெறும் என்பதில் சந்தேகமில்லை. "புணர் சொற்களின்" புதிய கூடாரம் நோக்கிய படிம வரிகள் அறிமுகம் செய்ய முனைந்திருப்பது... இவர் நடையில் தெரிய வருகிறது.*

*ஜன்னலுக்குள் மணக்கின்ற மல்லிகையை, இவ் ஏட்டில் காதலிக்கப் பழக்கிய இவர் எழுத்துக்கள், காதலின் புதிய மகத்துவமென்ற நொடியை பிரகடனப்படுத்தி இருக்கிறது. சுவாசத்துக்குள் நீ கூடு கட்டு... உன் தாய்மொழிக் குஞ்சுகளுக்கு சிறகு செய், தமிழின் பறத்தல் என்பது ஈர்ப்புவென விழும் துளிகளாக்கிக் காட்டு... பரந்த ஆகாயம் உன் வசம்... எழுதுகோல் அதில் உன் வாகனம்...*

*இளம் கவிஞனே யூனுஸ்... எழுதிக் கொண்டேயிரு... திறமையினை இன்னும் வளர விழை, முரண்பாடுகளின் உலகமிது. தீயெது தீபமெது? என்ற பிரி நிலையை உணர்... வாசிப்பின் தீவிரம் உன்னை வளமடையச் செய்யும்... எழுத்துலகில் நீயும் ஜெயம் பெறுவாய்... நீ கொண்ட சொற்கள் முடி சூடும்... எனது வாழ்த்துக்கள்.*

## கவிவானில் பூத்த தாரகை!!!

■ கவிவேந்தர் - வில்லூரான்

காத்தநகர் முஹம்மது தாஹிர்
கைப்பிடித்த சீனத்துல் முனவ்வறா
பூத்தமகன் முஹம்மது யூனுஸ்
புரிந்த மனையாள் அனீசாபானு
காத்தநகரான் என்னும் கவிப்பெயருள்
கவிவானில் பூத்த தாரகையாய்
யாத்தளித்த புதுக் கவிக்குள்ளே
யானறிந்த யதார்த்தம் காத்தான்!

இலக்கியத்தின் துறைபல இவனேகி
இன்றுவரை எழுதுகோல் ஆயுதத்தால்
கலக்குகிறான் கவிதை கட்டுரையோடு
கதைபுனைவு ஊடகத் துறையென்று
உலவியிவன் இலக்கிய உலகமெலாம்
ஓங்கப் புகழ்விருது சான்றுகளும்
கலையுலகிற் பெற்றபெரும் கவிஞனிவன்
கன்னிப் பனுவலொன்று கண்டானின்று!

வாசிக்கும் வரமதனால் வந்துகவிப்
புலம்நின்று ஆசித்து ஆக்கிவிட்டான்
நேசித்து இலக்கியத்துள்ளே நின்றின்று
சாதித்தான் சாதனைகள் பலவென்று
போதித்த காலத்துள் புகுந்திருந்ததவன்
ஆசையெல்லாம் புகழாக்கி நின்றான்
சாதிக்கும் வெறியாலே முயன்றவனும்
மூன்றாம் சாமத்து புன்னகை தந்தான்!

மின்மானியோடு மின்னூலும் படித்துவந்து
மிகைபடக் கவித்துறையுள் மின்னுமிவன்
அண்ணல் நபியருளால் அடைவானிவன்
அருட்கொடை குர்ஆன்நெறி வழிநின்று
அகிலமிது போற்றிடவே தமிழ்வானில்
அடையவேண்டும் பெரும் புகழென்று
இன்னூலது போற்பல இயற்றிச்சமூகம்
இழிவுநீக்க இலக்கியத்தின் வழிநின்று!

## எந்தன் இதயத்தில் ஊறிய வார்த்தைகள்

*எந்தன் மனக்கிடக்கையில் ஊசலாடிய உணர்வுகளை சராசரி மனிதனாய் சமூகத்தில் தொங்கி எனக்கோ புரிந்த பாஷையில் கவிதையாக்கி "மூன்றாம் சாமத்து புன்னகை" பிரசவத்தை வாசக நெஞ்சங்களின் கரங்களில் ஒப்புவிப்பதில் மட்டில்லா பரவசம் அடைகிறேன்.*

*எந்தன் ஆறாம் விரலாக சின்ன வயதிலிருந்தே ஒட்டிய காகிதமும் பேனாவும் இன்னும் இணை பிரியா உறவாகவே உரசிக் கொண்டிருக் கிறது. எழுத்தும் பேச்சும் எனக்குள் ஊறி வசமாகிய தருணத்தில் அகக்கண் திறந்து ஆட்டுப்பிழுக்கையாக ஆங்காங்கே கொட்டுண்டு கிடந்த அடாவடிகளை... அடக்குமுறைகளை... கபடங்களை... சாக்கடைகளை... கொட்டி வைக்க சிறந்த சாதனமாகவும் ஆயுதமாகவும் கை கொடுத்தது கவிதையெனும் சின்னக் கீறல்களே.*

*கவிதையென்பது கற்பனா சக்தியோடும் இயற்கை மீதான பிடிப்போடும் சமூகத்தின்பால் ஏற்படுகின்ற கவர்ச்சியாலும் தன்னில் ஆக்கிரமிக்கின்ற செயற்பாடுகளை மையப்படுத்தி கிறுக்கப்படுகின்றதொரு கிறுக்க லென்பது என் நிலைப்பாடு.*

*என்னை கவிதை கட்டுப்போட்டு வைத்திருக்கிறது. கவிதை எழுத வேண்டுமென்பதற்காக வலிந்து எழுதுகோலையும் காகிதத்தையும் நான் கையில் தூக்கியது கிடையாது. எப்போதெல்லாம் உணர்வுகள் கொதிநிலை அடைகிறதோ அப்போதே நான் கவிதையோடு பேச ஆரம்பித்து விடுவேன்.*

*அதற்கு காலம், நேரம், இடம், ஏவல், விலக்கள் எதுவுமே நான் தீர்மானித்த தில்லை. அர்த்த ராத்திரியில் கவிதைகளோடு பயணித்திருக்கிறேன்... வேலைத்தளத்தில் நீந்தித் தவண்டிருக்கிறேன்... கவிதை எனக்கு பிடித்துப் போன சமாச்சாரம்... அதனால்தான் தந்தையும் மகனுமாக வாழ்கிறோம்.*

*மூன்றாம் சாமத்து புன்னகையை தொகுதியாக்க நீண்ட பிரயத்தனங்களை நான் எடுத்திருக்கிறேன். சில பொழுதுகளில் சிலந்திவலையில் சிக்குண்ட சந்தர்ப்பங்களில் போராட்டம் நடாத்தி தடைகளை உடைத்து உயிர்ப்படைந்திருக்கிறேன். அந்த தருணங்களை எண்ணிப் பார்க்கையில் என் எழுதுகோல் ஆயுள் முழுவதும் இறக்கைகட்டி பறக்க வேண்டுமென பேரவா கொண்ட நேரமும் உண்டு.*

*இருண்ட யுகத்தின் சாட்சியங்களுக்கு விருந்தாகவும், கபடத்தனமாக புன்னகையை வீசும் அக்கிரமக்காரர்களின் ஆக்கிரமிப்பிலிருந்தும் தப்பிக்க என்னை நான் பட்டை தீட்டிய சந்தர்ப்பங்களில் எனக்கு ஒத்தடம் போட்டு ஊக்கமருந்தை ஊட்டி விட்ட நல்ல உள்ளங்களை என்னால் என்றுமே மறக்க முடியாது.*

*2000 ம் ஆண்டுகளிலிருந்து பேனா பிடித்த எந்தன் விரல் எத்தனை வெட்டுதல்களையும், கழுத்தறுப்புக்களையும், காட்டிக் கொடுப்புகளை யும் சந்தித்திருக்கிறது. அத்தனை தடைகளையும் உடைத்து பலப் பரீட்சை நடாத்தி முன்னேறி இருக்கிறேன் என்பதற்கு சாட்சியம்தான் மூன்றாம் சாமத்து புன்னகை.*

*இதில் சிந்துகின்ற புன்னகை ஒவ்வொன்றும் நான் சந்தர்ப்ப சூழ்நிலைக் கேற்ப அனுபவித்த, பார்த்து ரசித்த, நடப்பியலோடு சம்பந்தப்பட்ட குறிப்புகள் மாத்திரமே. ஆக நான் நெடுப்பமாக இழுத்த மூன்றாம் சாமத்து புன்னகை படையலை தருவதற்கு பக்கபலமாக இருந்த வல்ல நாயன் அல்லாஹ்வுக்கே எல்லாப் புகழும்.*

எம்.ரி.எம். யூனுஸ்
- காத்தநகரான் -

# உள்ளே மிதப்பவைகள்

**ஊஞ்சல்கள்** **நிழல்கள்**


| | |
|---|---|
| 001 - தேகக் கூட்டில் அடைபட்ட ஆன்மா.!!! | 025 |
| 002 - ஊத்தை நாறிய பொழுதில்.!!! | 027 |
| 003 - பருவப்பட்ட பாவையின் மனசு.!!! | 029 |
| 004 - பொத்துக் கொண்டு வழிந்த நீர்.!!! | 031 |
| 005 - காற்றைக் கிழித்த மழைச் செண்டு.!!! | 033 |
| 006 - ஊமையாகிய கொச்சைத் தமிழ்.!!! | 035 |
| 007 - வெந்து தவித்த பச்சை உடம்பு.!!! | 037 |
| 008 - முடிச்சுப் போட்ட சங்கதி.!!! | 039 |
| 009 - மோப்பம் பிடித்த நவீன வார்த்தை.!!! | 041 |
| 010 - புரிவுகளில் பரவிய பாஷை.!!! | 043 |
| 011 - தீப்பொறியைக் குடித்த குட்டிப் பிசாசு.!!! | 045 |
| 012 - சமரசத்தில் புன்னகையை வீசுதல்.!!! | 047 |
| 013 - உரத்துப் பேசும் ஊர்வாசி.!!! | 049 |
| 014 - சந்திக்கு வந்த போலிக் காகங்கள்.!!! | 051 |
| 015 - வேசம் அறுத்த வனத்தின் வரைபு.!!! | 052 |
| 016 - சமாளித்துப் போன சாமான்யம்.!!! | 054 |
| 017 - வேதனையில் ததும்பிய சுமை வண்டி.!!! | 056 |
| 018 - மேனி தேய்த்து ஊதப்பட்ட உயிர்.!!! | 058 |
| 019 - கூட்டமாகக் கூடி துவேசத்தை தும்மல்.!!! | 060 |
| 020 - ஆண் பனைக் கூடு.!!! | 062 |
| 021 - வைப்புச் சரக்காகிய இதயம்.!!! | 064 |
| 022 - மீளெழுதலுக்கான வாசிப்புப் பதாதை.!!! | 065 |
| 023 - நூலேணியில் குதித்த நினைவுகள்.!!! | 066 |

**ஊஞ்சல்கள்** **நிழல்கள்**

| | |
|---|---|
| 024 - அஞ்சலுக்கு மாநாடு நடாத்தும் தலைகள்.!!! | 068 |
| 025 - மிதிபட்ட வெள்ளை ஓவியம்.!!! | 070 |
| 026 - மூன்றாம் சாமத்து புன்னகை.!!! | 071 |
| 027 - உச்சம் புதைத்து சிதைந்த சோதை.!!! | 073 |
| 028 - திக்கு முக்காடிய சூட்டுக் குழல்.!!! | 075 |
| 029 - கனவு காற்றோடு கலத்தல்.!!! | 077 |
| 030 - தவளைகளின் பாய்ச்சல்.!!! | 079 |
| 031 - தொப்பித் தலைக் குரங்கும் சாரம் கட்டிய குண்டர்களும்.!!! | 081 |
| 032 - மூப்பின் மீதான போராட்டம்.!!! | 084 |
| 033 - வெளிச்சம் தேடிக் கருகிய சாமம்.!!! | 085 |
| 034 - முரட்டுப் பார்வை.!!! | 087 |
| 035 - குடுவையில் கட்டப்பட்ட வாழ்வு.!!! | 089 |
| 036 - புத்தி ததும்பிய முக்கால் மூளை.!!! | 091 |
| 037 - கருத்துப் போன குருத்து மனம்.!!! | 093 |
| 038 - அள்ளிக்குத்திய மொட்டை வார்த்தைகள்.!!! | 095 |
| 039 - தொலைதலின் ஆதிக்கம்.!!! | 097 |
| 040 - எண்ண அலையின் மோதல்.!!! | 098 |
| 041 - நீயாகி நானாதல்.!!! | 099 |
| 042 - குளறுபடியில் சிக்கிய வாழ்வு.!!! | 100 |
| 043 - காற்றோட்டலின் முனக்கம்.!!! | 102 |
| 044 - முத்திப் பெருத்த மரம்.!!! | 104 |
| 045 - ஆத்தோரக் குயில்கள்.!!! | 106 |
| 046 - பிரவாகமெடுத்து ஓடும் மௌனிகளின் வாசல்.!!! | 108 |
| 047 - வசீகரமாகப் படர்ந்த வலிகள்.!!! | 110 |
| 048 - புணர்தலின் கொடுமை.!!! | 111 |
| 049 - புழுதிக்காலில் சிறையுண்ட கனா.!!! | 113 |
| 050 - மூட்டை கட்டிய மேகம்.!!! | 114 |
| 051 - சந்தியில் குந்தும் பட்டாம்பூச்சிகள்.!!! | 116 |

## தேகக் கூட்டில் அடைபட்ட ஆன்மா!!!

கூசாவில் அடைக்கப்பட்ட
வெள்ளை ஆன்மா...
இறைவனின்
சன்னிதானத்திற்குப்
பறந்து சென்றிருக்கிறது!!

அவன் வரைந்த
எல்லைக் கோடுகளின்
பட்டியல்கள் புரட்டப்பட்டு...
"ஆன்மா" மரண வானவர்களால்
ஆய்ந்தெடுக்கப்பட்டிருக்கிறது!!

நாற்றிசையும்
அலைமோதிய ஆன்மாவில்
அத்தனை ஆசைகளும்...
பிரதியெடுக்கப்பட்டு
விடுகைப் பத்திரத்தில்
ஊஞ்சலாடியது உயிர்!!

சொத்து... சுகம்...
குடும்பம்... குலம்...
கோத்திரங்கள்..
அத்தனையும் விலகிப்போக...
ஆறடி நிலத்தில்
அடங்கியிருக்கிறது உடல்!!

இனி பக்கத்தில்
மனைவி பிள்ளையென
உறவு கொண்டாடிட...
துணைக்கு யாருமில்லாமலே
காலம் நகரப் போகிறது!!

தேகக் கூட்டில்
அடைபட்ட பறவை...
பொய்த் தூக்கங்களோடு
பொய்யா மொழியை
உசுப்பேற்றி...
தனித்து வாழும்
மண்ணறையில்!!!

07.07.2016

## ஊத்தை நாறிய பொழுதில்!!!

அடைக்கலம்
கேட்டுக் கேட்டு
வீட்டு விறாந்தையில்
தவியாய்த் தவித்துத் தாவியது
சாம்பல் சிட்டுக் குருவி...
ஜன்னல் முகப்பில் யாரோ
கொச்சை மொழியில் பேசி...
சுமைகளைக் கடத்தி வந்து
சமர்ப்பித்த அசைவில்
ஊஞ்சலாடியது உள்ளம்
வெட்ட வெளியில்!!

அசந்து மெல்லென ஆடும்
இளமையதின் சுயம்வரத்தை
இறக்கி வைத்த திமிரில்
உரிமம் கொண்டாடியது கனவு...
ஊத்தை நாறிய பொழுதில்
வியாபித்த சந்தோசத்தில்...
தாவிக் குதிக்கிறது வாழ்வு!!

யாரோ இறக்குமதி செய்த
முகப்பின் அழகை ரசித்து...
மேலும் கீழுமாக குஸ்தியடித்து
பசுமையின் முகவரி தேடிய
சாம்பல் குருவியால்
கும்மாளம் போட்டிட முடிகிறது!!

இருந்தும்
வாழ்வை விரக்தியில்
தொலைத்த இரட்டைப்பறவை...
தனித் தீவில் கூடி
சந்து பொந்துக்குள்
கூடு கட்டி...
சலனங்களோடு வாழப்போகிறது
சுமைகளைக் கடத்திய
நினைவின் சேகரத்தில்!!!

14.08.2016

## பருவப்பட்ட பாவையின் மனசு!!!

இதமான இதயத்தை வதைத்து
வாதாடிப் போனது வாழ்வு...
யாருக்கும் புரியா ஆசையதை
இதயவறைக்குள் பூட்டி...
பெட்டிப் பாம்பாகவே
பேதலித்துக் கிடக்கிறது...
பருவப்பட்ட பாவையின் மனசு!!

காலம் கடந்த சோகத்தில்
உணர்வுகளை உசுப்பி...
மனதில் மாற்றி வைத்த
வேதனைகளை
யாரிடம் சொல்லிப்
புலம்புவதென்ற வேக்காட்டில்
கனத்துப் போனது மனசு!!

கொதித்து வற்றிய
உணர்வுக் கிடக்கையதை
உருட்டிப் பார்க்கையில்...
நூறு பாகையில் உலர்ந்து
நாற்பதோடு தவண்டு...
ஏறிக் கொள்கிறது
வெள்ளைப் பூச்சு தலையில்!!

ஊருக்குள் உலாவுகின்ற
செல்வியென்ற பேச்சு
சொந்தமாகிப் போகையிலே...
வம்பு  வசைகள் மட்டும்
முத்திரையாய் முத்தி
மனதைக் குடைகிறது!!

நாளைய வருடல்களை
இதயம் சுமப்பதற்குள்...
இராத்திரி முழுவதையும்
இடம்மாற்றி அடகு வைத்து...
கடந்து செல்லத் துடிக்கிறது
பருவப்பட்ட பாவையின் மனது!!!

02.10.2016

## பொத்துக் கொண்டு வழிந்த நீர்!!!

அடைக்கபட்ட
சிமிழ் முனைவை
திறந்து விட்டதில்...
பச்சை வெளியில்
துள்ளிக் குதித்து விளையாடிய
குட்டிப் பசு...
ஆசுவாசமாக இறுகப்பிடித்து
வாயூறச் சுவைத்து
வயிற்றைக் கழுவியது!!

சுவைத்தலென்ற
சாதிப்புக்குள்...
இத்தனை நோக்காடு
தாய்மைக்குள் இருக்குமென
குட்டிப்பசு அறிந்தபாடில்லை!!

முன்னங்கை
தலைத் தடவலோடும்...
அன்பு அரவணைப்போடும்
உச்சி முகர்ந்து
வெள்ளை நீரை
வாய்க்குள் திணித்து...
பாறாங்கல்லை இறக்கி வைத்த
ஆச்சரியத்தில்
அசந்து போனது தாய்மை!!

இன்பம் இதழ் விரித்து
பாய்கையில்...
நையாண்டிச் சிரிப்பில்
கிளு கிளுத்து நரி விரட்டி
புன்னகைப் பூவை
பசு சிதற விட்டதில்...
பாசம் மட்டும்
மெல்லெனக் கசிந்து
பொத்துக் கொண்டு வந்தது
கழற்றி வைத்த ரகசியமாக!!

தாய்மை தயாளமாக
ரசனைக் குறிப்பெழுதி...
வைத்த கண் வாங்காமல்
பார்க்கையில்...
அன்பது கலப்படமில்லாமல்
வெள்ளைத் துளியாக
நிரம்பி வழிகிறது வாய்க்குள்!!!

26.07.2016

## காற்றைக் கிழித்த மழைச் செண்டு!!!

வானத்துப் பெருவெளியை
பருத்திப் பஞ்சனையில்
படுக்க வைத்து...
அங்குமிங்கும்
அசைகிறது பருத்திப்பூ
சுதந்திரத் தவிப்பில்!!

நீண்ட வானத்தின்
நிழற்படத்தை மறைத்து...
மஞ்சள் தண்ணியடித்து
மந்திரச் சொற்களை
பாராயணம் செய்து
இறக்கியது வானம்!!

ஓவியனால் வசியம்
செய்யப்பட்ட தூரிகையில்
ஒட்டிக்கொண்ட
வர்ணப்பூச்சுகளை துரத்திட...
வீசப்பட்ட தூசுகளின்
துண்டங்கள்...
கருமேகமாகத் தொங்கி
தம்பட்டம் புரிகிறது!!

வறண்டு பாலைவனமாக
வெடித்த...
பச்சை மரத்தின்
இச்சை தீர்க்க
வேகமாகக் காற்றைக் கிழித்து...
வாசனைச் செண்டுகளை
கொட்டுகிறது பூமிக்கு!!

வானம் சிரித்து
மேகம் அழுத கையோடு
பூமி நனைகையில்...
காற்று மட்டும்
இப்போது...
..........................................
..........................................
துள்ளிக் குதிக்கிறது
ஒற்றுமை விதை தூவி!!!

29.02.2016

## ஊமையாகிய கொச்சைத் தமிழ்!!!

மழலைகள் உமிழ்ந்து விடும்
மந்திர வார்த்தைகளை
மொழியாக்கம் செய்கையில்...
அடிக்கடி
தோற்றுப் போவதும்...
அவளின் காதுகள் சிவந்து
உதடுகள் விம்மி...
தடுமாற்றத்தில் வாயடைத்து
சிறகுகள் விரிந்தது விசித்திரமாக!!

கொச்சைத் தமிழில் அவ(ள்)ன்
கொஞ்சமாய் பேசுகையில்...
ஆவதும் அழிவதுமாக
அறைகுறை வசனங்கள்...
குறிப்பெழுதியது காதில்
சுவைச்சாறு விழுங்க!!

உதறல் மொழியில்
சிட்டாய் மாறி
குட்டிக்கரணம் போட...
உண்டியல் உதட்டை விரித்து
பழம் பாடங்களை சுவைத்து
அசைபோட்டதில்
சமத்தமானது குட்டிப் பேச்சு!!

பேச்சில் மேய்ந்த அவ(ளோ)னோ
தேய்பிறையாகி
தேம்பல் மொழியில் விழ...
ஊமையாகிப் போனது
அம்மாவின் இலக்கணப் பூச்சு...
தத்தித்தடுமாறிய
கொச்சைத் தமிழில்
அவ(ள்))ன் சிந்திய மொழிகள்
சுவாசம் நடாத்தியது நிலையாக!!!

29.07.2016

## வெந்து தவித்த பச்சை உடம்பு.!!!

கனவுகள்
கண்ணீரைக் கெட்டியாக
கொட்டித் ததும்புகையில்...
காக்கையது
கரைந்திடாத பொழுதில்
வேட்கைகள் வேடிக்கையாகி...
பாதகமில்லா சாதகத்தை
சாதனைக்குள் தள்ளி வைக்கிறது
கொடூரர்களின் ஆக்கிரமிப்பில்!!

சிறையான சிற்பங்களை சமைத்து
உச்சமுடன் கிரீடமாக சூடி வைக்க...
சாட்டை வசனங்களால்
மறுபடி சாட்டியதில்
காலங்கள் கடந்து...
சாதல் வரியை
மொத்தமாக ஊட்டியது
வாழ்வைத் தொலைத்த
குட்டிக் குமாரத்தியாக நின்று!!

தொல்லை வார்த்தைகளை
அக்கிரமத்தில் கையாண்டு...
சாகச நிரல்களில் சிறைப்படுத்த
வேதனைக்கு வேட்டு வைத்து...
முழுவதுமாக தொலைத்த மூச்சில்
எருமைகள் தாவிக் குதிக்கிறது
இரவலான இரக்கத்தில்!!

பாவி தொட்ட வேதனையில்
வெந்து தவித்த பச்சை உடம்பு...
மளிகைப் பொடியில் துகளாகி
ஓட்டைக்குள் அடைந்ததான
ரம்மியமான பொழுதுகளை...
தேடித்தேடி அலைகிறது
அவஸ்த்தை நீங்கிட!!!

02.08.2016

## முடிச்சுப் போட்ட சங்கதி!!!

வாழ்க்கைப் பாடங்களை
தரிசிக்க நினைத்ததில்...
சின்னத்தனமாகக் கிடந்த
கிடங்குகளை
ஆழமாக வெட்டி...
மனசுக் குழிக்குள்
நிறுத்திட முடியவில்லை!!

கனியாத பழங்களையும்
பச்சை இலை குழைகளையும்
நீண்ட நாளாகவே
ரசித்து ருசித்து ஓடியதில்...
ஞாபக வயிறு
எச்சங்களால் நீண்டிருக்கிறது!!

சின்ன வயதில்
குற்றிக் காசுகளை
உண்டியலில் தள்ளிவிட்டு...
பத்துத்தரம் ஓடியோடி
பார்த்து ரசிக்கையில்
உள்ளம் குளறுபடியில்
சிக்கித் தவிக்கிறது!!

பழைய நினைவுகளை
மனதுக்குள் உள்வாங்கி...
வீங்கிப்புடைத்த கனவுகளை
சுமக்கையில் உள்ளம்...
ஊறுகாயாக வெம்மி
உணர்விழந்த வலிகளை
உசுப்பேத்தி விடுகிறது!!

முடிச்சுப் போட்ட மனதை
மறுபடியும் அவிழ்த்து...
நிழல்படம் காட்டி...
நிராசைகளை ஆசைகளால்
ஒத்தடமிட்டு
புதுப்பாடம் புகட்டியதில்...
கனவுகள் மின்னலாக
மாறிக்கொள்கிறது
மனசுப் பெருஞ் சுவரில்!!!

17.01.2016

## மோப்பம் பிடித்த நவீன வார்த்தை!!!

நகர்கின்ற வாழ்க்கை
அட்சரத்தை
நிலவுத் தொட்டியில்
தொங்க விட்டு...
வஞ்சமில்லா இதயத்தை
நாசப்படுத்தி
நகல் எடுக்கிறார்கள்!!

பூட்கை நிறைந்த வேட்கையை
மோப்பம் பிடித்து...
நவீன வார்த்தைகளைப் படமாக்கி...
பிஞ்சு நெஞ்சில்
உணர்வுகளை உசுப்பியதில்
நாசம் விரிகிறது!!

ஆனந்த ராத்திரியில்
சிரிப்பாணி பூட்டி...
அகன்ற அறையில்
நிறைந்த கதைகள் பேசி...
வாழ்வை நிமிர்த்தி வைப்பதில்...
வேடிக்கையரங்கானது வாழ்வு!!

விடையமது நீண்டு
சிட்டுக்களில் சிலையாகி
நீந்திக் கொள்கையில்...
நங்கூரமிட்ட
அசல் வாழ்வைத்
தட்டி விடுகிறது வர்ணத்திரை!!

நடிப்பை பத்திரப்படுத்தி
கதாநாயகனின் வாசகங்களில்
வாழ்வைப் பிரட்டி
மனிதம் தொலைகையில்...
நவீனம் மட்டும் தலைக்கேறி
நாச மணியைப் பூட்டி
பாசத்தை வெட்டி விடுகிறது!!!

10.04.2016

## புரிவுகளில் பரவிய பாஷை!!!

பாஷைகளைக் கட்டி
உயரத்தில் ஏற்றி
அடைத்து வைத்திருக்கிறது
கவிதை உலகு...
அடிக்கடி மிதக்கும் வரைவுகளை
ஆசைதீர அனுப்பி
பவனி வருகிறது
கவிதைவெளி!!

பிரியங்கள் தொலைகையில்
புரிவுகள் மடிந்து...
தருதலைத் தலைகளின்
தொல்லைகளை
தணியாமல் பேனா கிறுக்க...
சுளையாகப் பற்றியது
ஆறாம் விரலாய் பேனா!!

முகவரி தேடிய ராத்திரியில்
சுருள் வடிவ காகிதப்பூவில்
மெய்ப்பாடு ஊதி...
ரசனை கேட்டுச் செதுக்கிய
ஆயிரம் வார்த்தைகள்...
ஆகாயக் கங்கையிலே
அலாரமாய் அடிக்கிறது
ஆச்சரியக் குறியோடு!!

கச்சான் காற்றில் சிதறும்
ஆசை மச்சங்களை
மொத்தமாக வரைந்து
நாற்காட்டியில் பொறித்து...
குதூகலிக்கும்
நல்ல செய்திகளோடு
தீட்டப்பட்ட சொற்களை
விதைத்ததில்...
கொஞ்சிக் கொள்கிறது
கவிதை காற்றோடு!!!

21.03.2017

## தீப்பொறியைக் குடித்த குட்டிப் பிசாசு!!!

குர்ஆனைப் போர்த்திய
குட்டி தேசத்தின்
குரல்வளையில்
கையைப் புதைத்து
சல்லாபம் புரிகையில்...
சரிந்து போனது
சரித்திர தேசம்!!

குமருகளின் பூ மேனியில்
நீ பூசை நடாத்தி
குடும்பம் நடாத்துகையில்...
எங்களது
உணர்வுகள் உசும்பி...
கண்ணீரைக் கட்டியாக
கிலோக் கணக்கில் தள்ளி
கொந்தளித்தது நெஞ்சம்!!

இதய தேசத்து முனகல்களை
கேட்டுக் கேட்டு சலித்துப்போன
காதுகளை பிடிங்கியெறிகையில்...
கைகள் கட்டப்பட்டு திரைச்சீலை நீக்கி
இச்சையடக்கிப் பாய்கையில்...
அத்தனை விம்மல்களையும்
அடர்ச்சியாக்கிய மேலாதிக்கத்தில்..
நீ நடித்த நாடகங்கள்
நெஞ்சத்தில் குத்தியது!!

உந்தன்...
தேசத்தில் ஊறிய
தீப்பந்தத்தைக் குடித்து
நீந்தியதில்...
உம்மாக்களின்
முகங்கள் சிவந்து
எதை எதையோ
உதடுகள் உச்சரித்துப் போயின...
குட்டிப் பேய்க் காற்றின்
வக்கீரத்தை சுட்டெரித்து
சுவை கருகியதில்!!

இனி...
நீ – ஆடும் ஆட்டங்கள்
அத்தனையும் அடங்கி...
சுதந்திரக் காற்று
சுதந்திரமாய் விழும்
பலஸ்தீன் மண்ணில்!!!

30.11.2016

## சமரசத்தில் புன்னகையை வீசுதல்!!!

பட்டாம்பூச்சிகளின்
சமரசத்தில் சிறகசைத்து...
துக்கங்களை பெரு முடிச்சாக்கி
பெருவெளியில்
மிதக்கிறேன் தனியாக.!!

நெளிவுசுளிவோடு வசப்பட்ட
வில்லைகளை வாயில் நிரப்பி
வெடி மருந்தாக்கி...
புதைந்து கிடக்கும்
காயங்களுக்கு ஒத்தடமிட
ஒப்பந்தம் செய்கிறேன்!!

கடலை சுண்டுக் கோப்பையில்
அள்ளி எடுத்து...
ஒத்துப்போகாத காற்றுக்கு
தாலிக்கயிறைக் கட்டி....
காட்டமாக நாலு வார்த்தை
ஊதப் போகிறேன்!!

செவிப்பறைகளைக் கழட்டி
இதயத்தில் குத்தி...
குடல்களை உருவி
மாடிப்படியில் நிற்கச் சொல்லி...
வேசங்களை மேசையில் ஊதி
குப்புறப் படுக்க வைத்து...
சோதனையால்
ஆரத்தி கட்டப் போகிறேன்!!

முடியாத இரவை
விடியா மூஞ்சோடு
தகனம் செய்து...
முல்லைகளை
சாமரமாக வீசப்போகிறேன்
.....................
...................................
வாழ்வு ஊஞ்சலாடும் வரை!!!

19.04.2017

## உரத்துப் பேசும் ஊர்வாசி!!!

மனிதப் பட்சிகளின் தேடல்கள்
இன்னுமே தீர்ந்த பாடில்லை...
ஒன்றுக்கு நூறு சேர்த்து
நூற்றி ஓராவதாக
யாரை சுரண்டலாமென்ற
சித்தாந்தத்தில் ஊறித் திளைத்து
ஓடித்திரிகிறார்கள்!!

அன்பை அப்படியே
கழட்டி வைத்து
பாசத்தை விரட்டியடித்து...
வித்தையாக கண்ணாமூச்சி
ஆடிக்கொண்டே...
ஆடிக்காற்றை
தவம் கேட்கிறார்கள்
தேய்ந்த உறவுகளைத் தேடி!!

தன்மானப் படகை
தத்தளிப்பில் ஓட விட்டு
நேசத்தை யாசகம் வாங்கி...
நடுங்கு நிலையில்
நடுநிசியில் பங்கு கேட்டு நிற்கிறது
நிலையில்லாக் கோட்பாடாய்!!

உரத்துப் பேசும் தென்றல்
ஊருக்குள் உரசிப்போக...
புளித்துப் போன
ஊர்வாசிக்காக ஊர்வலமெடுத்து
மரண சாசனம் எழுதி
இழுத்துச் செல்வதில்
சந்தோஷ மூட்டைகளை
சுமக்கிறது மனிதம்!!

யாரும் புரியா சாமத்தில்
கண்ணீர் வடித்த உறவு
மூன்றாவது திசையில்
மறைந்திருந்து ஞானம் தேடி...
வேட்டையாட நினைக்கிறது
ஆதாயம் தேடி
விரிவுரை நிகழ்த்த!!!

17.03.2016

## சந்திக்கு வந்த போலிக் காகங்கள்!!!

அவனின் வார்த்தைகள்
ஆல மரத்தில்
தொங்கிக் கொண்டு...
ஊனக் காயங்களை
அறுவடை செய்கிறது!!

வெள்ளைக் காகங்கள்
பாதங்களின் முகடுகளில்
குந்தியிருந்து...
காலாவதியாகிய
அசட்டு வார்த்தைகளை
கொத்திக் குடிக்கிறது!!

வரிக்கு வரி
மலிந்த ரணங்களை
சாலையோரங்களில் இறக்கி...
ஆசைகளைப் பச்சை குத்தி
ஓய்விலாச் சொல்லோடு...
குடியேற்றம் நடாத்தி
இடம்மாறி வருகிறது!!

வருவதும் போவதுமான
போலிப் பாத்திரம்
சட்டைப் பைகளை அடைத்து...
கூடிய மொழிதலை
இணக்கத்தோடு
இறக்கி வைக்கிறது
இரகசியமாக!!!

12.03.2016

## வேசம் அறுத்த வனத்தின் வரைபு!!!

மௌனங்கள் பேசியதில்
நிலவு என் மீதேறி
சாகசம் செய்தது...
வேசம் அறுத்து
பூமிக்கு அழைத்து வந்து
நீரோடையில்
நீந்த விடும் படி!!

அச்சொட்டாக
வானத்தை வரைந்து...
பால் நிலவையும்
பூப்பெய்திய முகிலையும்
அறுபட்ட நட்சத்திரத்தையும்
கட்டி வைத்து
வர்ணங்களால் பிசைகிறேன்!!

சிவப்பு நிறத்தில்
வெம்பிய இரத்தம்
நிரம்பி வந்ததில்...
அசலில் ஒன்றாகி
பெயர்கள் மட்டும்
இடம் மாறியது!!

பச்சையாக வளரும்
தோப்புகளில்...
மொத்தமாக நிற்கும்
மரங்களைப் பார்க்கையில்...
பெயரில் வேறாகி
இன்னும்.... இன்னும்...
மரமாகவும்
..................
செடியாகவுமே
..................
உயர்ந்து நிற்கிறது
வனத்தில் வசீகரமாக!!!

03.08.2017

## சமாளித்துப் போன சாமான்யம்!!!

உனக்கும் எனக்குமான
நேர் கோட்டுப் பாதையில்...
நீயும் நானுமாக
இதயவறைக்குள்
குறுக்குக் கோடுகளை
கிறுக்கிப் பார்த்ததில்...
உலகத்து அதிசயமும்
தோற்றுப் போனது!!

நானோ
புண்ணாக்கின் வாசமதை
வசமாகச் சுவைத்து...
விழுங்க முடியாமல்
காவிப் போகையில்...
உரத்துப் பேசிய மௌனம்
வெடித்துப் போனது!!

எனக்கும் உனக்குமான
விடியாத பொழுதுகளை
அட்டியல் போட்டு
அடக்கி வைத்ததில்...
சாட்சிக் கயிறு க(கா)ட்ட
முற்றத்தில் பொம்மையை
போர்வையாக்கி விடுகிறேன்!!

இதயம் சுமந்த வேதனையை
ஊஞ்சலில் வைத்துத் தாலாட்டி...
சமாளித்துப்போன
சாமான்யப் பொழுதை...
அடைமழையில்
நனைய விட்டு...
அரண்மனை வாசலில்
அடக்கி வைக்கிறேன்!!

எனக்குள் அடங்கிய
உந்தன் ஞாபக அலைகளை
பத்திரப்படுத்தி வைத்து...
பந்தாடிய அன்பை
இதயவறைக்குள்
இருவரும் வலிகளோடு
ஒட்டி வைப்போம்
உறவுகள் ஒட்டும் வரை!!!

01.10.2016

## வேதனையில் ததும்பிய சுமை வண்டி!!!

ஓலைக் குடிசையின்
ஓட்டையாலே
ஓங்கி நிற்கும்
நிலவை ரசித்து
ஒற்றைச் சாதம் பாயில் படுக்க...
மேகத்தைக் கடத்திய வானம்
ஓங்காலமிட்டு கதறியதில்
ஒட்டியது நிறைந்த வேதனை!!

சதுப்பில் புதையுண்ட
கால்களை வெறித்துப் பார்த்து...
யாருமறியா மழைத் துளிகளை
மறந்து பார்த்து...
உணர்விழந்த வாழ்வின்
வாழ்க்கைப் பா மீட்ட...
குபீரெனக்  கழுவியது
தண்ணீர்ப் பந்தல் மனசை!!

புழுதிவாசம் மூனாவது மூக்கை
உரசிப் போகையில்...
உரிமம் கேட்டு
பழுத்துக் கொட்டிய
வயல்வெளியில் ஆடியசைந்து...
இரண்டாவது இரவில்
புழுதி குடித்து
நிரம்பி வழிந்த வசிய நீரில்
விடியல் தொலைத்து
வறண்டு போனது வாழ்வு!!

யாருமறியா ஏக்கங்களை
கொத்திப் பிரட்டிய நிலத்தில்
வெட்டி விட்டு...
முரண்பாடாக்கிய வாழ்வை
கண்ணீரால் நிரப்பி...
வாசனையை நுகர முடியாமல்
சுமைவண்டி வேதனையில்
ததும்பியது கடன்களோடே!!!

01.08.2015

## மேனி தேய்த்து ஊதப்பட்ட உயிர்!!!

தொடரூந்துப் பயணத்தில்
மேனி தேய்த்து
ஊதப்பட்ட உயிர்
அங்குமிங்கும்
அசைந்தாடிப் பறக்கையில்...
பொதி செய்யப்பட்ட
உயிரை ஆய்ந்தெடுத்து
களவாடியது மரணம்
மண்ணறை வரை!!

இருத்தல் மீதான
வலிகளை
மூப்பின் பின்னரும் சுவைத்த
ஆச்சரியத்தில்...
பங்கிடப்படாத
உணர்வை உசுப்பி
உரமூட்டிப் பந்தாடிய
தைரியத்தில் அடைபட்டது
....................
உயிர்.!!

பரட்டைத் தலையில்
பங்கீடு கேட்ட
மொட்டைத் தலைக்கு
நகல் குடும்பிகட்டி
மகிழ்ந்த ஆத்ம திருப்தியில்...
மேனி தேய்த்து ஊதப்பட்ட
உயிர் வெடித்து அலைகிறது!!

யாருமில்லா தேசத்தில்
குழி தோண்டிப் புதைத்து...
எல்லோருமாகச் சேர்ந்து
பிடி மண் அள்ளியிறைத்து
மூடு விழாக் காணுகையில்...
வலிந்த மேனியது
அடங்கிப் போகையில்
அசந்து போனது ஆத்மா...
இனி...
............................
இருப்போருக்கு வாசிதான்!!!

03.07.2016

## கூட்டமாகக் கூடி துவேசத்தை தும்மல்!!!

செத்துப்போன சொற்களை
சிலாகிப்பில் சிறைப்படுத்தி
வாட்டசாட்டமாகக் கீறி...
மூர்ச்சையான செய்திகளை
முகப்புச் செய்தியாக வரைந்து
முகர்ந்து பார்க்கிறது தே(நே)சம்!!

நெருக்கடியில் வளருகின்ற
மொழி மாதிரி...
அடிக்கடி...
கபடத்தை சிக்க வைத்து...
தெருவறையில் ஊர்ந்து
கூட்டத்தோடே திரிகிறது
துவேசத்தை தும்மி!!

தொப்பித்தலை காக்காமாரின்
தொல்லைகளால்...
வழுக்குத்தலை குச்சிகளின்
போதனைகள் அறுபடுவதாக
துவேச முத்திரை குத்தி...
வீதிப் பலகையை இழுத்து
நெருப்போடு நகர்கிறார்கள்!!

இராத்திரி நேரத்தில்
கடைகளை வெளிச்சமாக்கி
அவனவன் ஆதாயத்தில்
கையைப் புதைத்து...
நெடிய தேசம்
கௌதமரின் பூமியென சொல்லி...
அள்ளூண்ட துவேசத்தை
தும்மி நடக்கிறார்கள்
நயவஞ்சகமாக!!

நாங்கள் மட்டும்
இலங்கையனென சொல்வதில்...
கலப்படமில்லா மொழிதலை
இதயத்து வார்த்தையாக
இறக்கி வைத்து விட்டு...
இறக்கை விரித்து
"இந்திக்க"வைத் தேடுகிறோம்!!!

20.11.2016

## ஆண் பனைக் கூடு.!!!

உணர்வுகள் உடைந்து
உறவுகள் தொலைத்து
உச்சத்தில் பறக்கையில்...
உருவம் மாறி
உருகுநிலையில்
உயர்கிறது வாழ்வு!!

தந்தி வந்தும்
தங்கையின் திருமணத்தில்
தலைகாட்ட முடியாமல்...
ஒட்டக தேசத்தில்
ஆசைகளை ஒட்டி வைத்து...
பாலைவனக் கட்டையில்
கட்டுப்பட்டுக் கிடக்கிறது பாசம்!!

தந்தையின் மரணச் செய்தி
காதுக்கு எட்டியும்...
கடைசி விமானத்தில்
பறந்தடித்து ஊர் கடக்கையில்...
உறவுக்காரர்கள் குழிக்குள்
புதைத்து வருகையில்
இதயம் கொதிக்கிறது!!

அம்மாவின் படுத்தபடுக்கை
காட்சிகளையும்...
வேதனைச் சம்பாசனையையும்...
அப்படியே அசைபோட
தொலைபேசியால் மட்டுமே
முடிகிறது கண்ணீர் மல்க!!

ஆண் பனைக் கூடாகி
தலை நிமிர்ந்து நிற்கையில்...
ஆசா பாசங்களை
ஆசைதீர அனுபவிக்க முடியாமல்...
எல்லை கடந்தும்
உணர்வுகளைச் சிதைத்து
பணத்தில் மட்டுமே
ஊறி நிலைக்கிறது வாழ்வு!!!

12.04.2015

# வைப்புச் சரக்காகிய இதயம்!!!

முண்டமாக மாறிய
உணர்வுகளைத் தூசு தட்டி...
முற்றத்தில் தவழும்
ஞாபக மூட்டங்களோடு
பத்திரப்படுத்தியதில்...
வித்தியாசமாகவே
விசாலிக்கிறது ஞாபகம்!!

மனித நண்டுகள்
ஆடும் ஆட்டத்தை
புது வெளியில் பரப்பி...
இரகசியமாகவே
பார்த்து ரசிக்கிறது நிழல்கள்...
பாவம் எத்தனை நாட்கள்தான்
நாட்காட்டியை உசுப்பேத்தி
வைப்புச்சரக்காகக் கணிப்பது!!

நாளைய பரப்பைக் கிண்டி
தேக்கத்தில் அடைத்து வைத்து
பாச மொழிகளைக் கொட்டுவதும்...
ஆசைக் கிழத்தியை அசையாது
பாதுகாப்பதுமாகவே நகர்கிறது
அகதிகளின் சாமம் காமமாக!!

வசியம் செய்யப்பட்ட
ஆசைக்கு புதுப்பாடம் புகட்டி
பாராயணம் செய்ததில்...
நிறைமதி கூடவே தேய்ந்து
குருட்டுத்தனமாக
கபட நாடகத்தை அரங்கேற்றி
இரைநீரில் அடைக்கிறது!!!

16.03.2014

# மீளெழுதலுக்கான வாசிப்புப் பதாதை!!!

அடர்ந்த ராத்திரியில்
மீளெழுதலுக்கான
மீள் வாசிப்புக்களை
நடாத்தியதில்...
இதயப் பேழையில்
தீ( நீ )ட்டி வைத்த
ரகசியங்கள் தலைக்கேறியது!!

கண்டிப்பு நிரம்பிய
மேலெழுதலோடு...
சங்கமிப்புப் பலகைகளில்
விளம்பர மொழிகளை
உடுத்து நிற்கும்...
அர்த்தத்தில் நிமிர்கிறது
அமாவாசைக் கண்டம்!!

நீளும் மௌனங்களில்
மெல்லியதாகப் பாடிய
வசைச்சொல் மேடையிலேறி
கூக்குரலோடு சிறக்க...
தராதர வரிசையில்
மறுமணம் புரிகிறது!!

ஒத்தாசை ஒத்தடத்தில்
ஒட்டிப் பிறந்த
ரகசிய அங்கிகளை
போட்டிமுத்து...
நம்பிக்கை விதையை
தட்டி வைத்து...
தம்பட்டம் அடிக்கிறது
இறகைத் தட்டி மீளெழ!!!

13.04.2016

## நூலேணியில் குதித்த நினைவுகள்!!!

மூச்சுக் காற்றில் முட்டி மோதி
சந்தனப் பொய்கையிலே
மிதந்து வரும் தென்றலது
தென்னங்கீற்றில் விழுந்தடித்து...
சமரசம் செய்கிறது
கடந்தகால நினைவலையை...
மூக்கு நிரை வாசனையில்
அரைகுறைச் சட்டையோடு
முற்றத்தில் ததும்பி ஓடும்
நீரில் குளிர்ந்தது வாசம்!!

நதிக்கரை மணல் மேட்டில்
கூடிக் குலவிக் கதை பேசி
பாசமதை விரித்து வைத்து...
குருத்து மணல் வீடு கட்டி
குறும்பாட்டம் ஆடியதில்
குஞ்சுச்சோறு கமகமக்க...
நூலேணியிலே குதித்த
பட்டமது அசைந்தாடுகையில்
குதூகலிக்கிறது
ரம்மியச் சாரலாக!!

ஆற்றங்கரைப் பள்ளத்தில்
துள்ளிப் பாய்ந்து ஓடுகின்ற
மீன் தூண்டிலில் சிக்குகையில்...
கெழுத்திமுள்ளூ குத்தியதில்
பேதலித்து நடுநடுங்கிய...
பொழுதுகளை
நினைப்பானில் கணிக்கையிலே
உள்ளமது
உசுப்பேறிப் போகிறது!!

குளக்கரைக் கட்டில்
குதூகலமாய் குந்தியிருந்து...
குளிர் இரவில்
குட்டிக் கதை பேசி...
இரவைக் கட்டி இழுத்து
இருட்டறை நிலத்திற்கு
சூடு வைக்க
குச்சியெடுத்து  கச்சை கட்டி
குஞ்சு மீன் சுட்டது
மூக்கைத் துவைக்கிறது!!!

23.11.2013

## அஞ்சலுக்கு மாநாடு நடாத்தும் தலைகள்!!!

நீங்கள் எங்கள்
சகபாடிகளை
சாகடிப்பதற்கான
முஸ்தீபு நடவடிக்கையில்
குதித்து விட்டதாக நினைத்து...
என் சமூகத்திற்கு நாலு பக்கத்தில்
காகிதப்பூ வரைந்து
அஞ்சல் செய்து விட்டேன்!!

கடிதத்தை விரித்துப் படித்து
கூட்டணி சேர்ந்த
எங்கள் ஊர்த் தலைகள்
என் அஞ்சலுக்கு மாநாடு நடாத்தி...
பெரிய தலையின் சுக துக்கம்
விசாரணை செய்து...
முடிவுகளை
கணினியில் தட்டச்சு செய்து...
அறிக்கையை சமர்ப்பித்து
அசந்து போவார்கள்!!

அரசியல்வாதிகள் லாபத்திற்காக
சமூக நீதி கேட்டு
கொடி பிடித்து...
கிளைகளை உசுப்பேத்தி
உண்ணா நோன்பிருந்து...
சத்தமில்லா சத்தியாக்கிரக
போராட்டத்தில் குதித்து
அடுத்த தேர்தலுக்கு
ஆயத்தமாவார்கள்!!

கலிசரைக் கூட்டம் நாவுயர்த்தி
கிசு கிசுவென படையெடுத்து
முடிவுகள் எட்டாமல்
ஏசிக் காரில் உலாவுவர்...
நாங்கள்
அக்கினித் தணல்களை
அள்ளியெடுத்து மொத்தமாக
மொட்டை மாடிவீட்டில்
சாவுமணி கட்டியவர்களாக
விடியவிடிய விழித்திருப்போம்!!!

21.11.2015

# மிதிபட்ட வெள்ளை ஓவியம்!!!

திசைகள் மாறியதில்
த(ந)ப்பாசைகள் சூழ்ந்து...
விசித்திர நிமிர்தலின்
அசை போடல்களைக் கூட்டியது...
நடைமுறைகள் அத்தனையும்
வசமாகவே பாடி ஓய்ந்தது!!

வேலிகளில்லாத நிலத்தில்
அத்துமீறிக் குடியேறி
குடித்தனம் நடாத்தும்
குரங்குச்சேட்டை மாதிரி...
துள்ளிக் குதித்து விளையாடும்
வெள்ளை ஓவியங்கள் மிதிபட்டு
கற்புகளை இறக்கி வைக்கும்!!

வைக்கோல் கட்டில்
பிரியமாக படுத்துறங்கும்
பேய்களும்... பிசாசுகளும்...
நடு நிசியில் ஓலைப்பாயில்
சுருதியை மீட்டி...
தெருத் தெருவாக
கதைகளை அளக்கும்!!

முனைகள் யாவும்
பனைக்கோரையில் புரண்டு...
தவங்களோடு தவிப்புகளை
தூக்கிச் செல்ல...
தூக்குக்கயிறில்
சிக்கிய கதைகள்
கூடிக் கழியும் கிடப்பில்!!!

14.07.2017

## மூன்றாம் சாமத்து புன்னகை!!!

இதயங்கள் இருண்டு
இடம்மாறிப் போகையில்...
வாழ்வது வலுவிழந்து
தரிசனப் பூக்களைத் தூவி...
மூன்றாம் சாமத்துப்
புன்னகையில்
கடன் கேட்டுத் துடிக்கிறது
பாழாய்ப் போன மனசு!!

விடியும் சாமத்தில்
புரட்சிகளைப் புறந்தள்ளி...
படையல்களைப் பத்திரப்படுத்தி
அடுக்கு வீட்டில்
கட்டி வைக்கையில்...
உணர்வுகள் உடைந்து
உறங்கிக் கொள்கிறது
வாழ்வில் தேறும் வரை!!

இளமை வனப்பு இடிந்து
முதுமைக்குள் முறுவலிக்க...
முண்டமாகத் தேறிய
மனையாளிடம்
மன்றாட்டம் நடாத்தி...
கருணை மனு கேட்கிறார்கள்
காலத்தைக் கடத்த!!

தாய்மைகள் தடவப்பட்ட
ஊமைத் திசையில்...
தந்திர தாவணியை
காற்றில் தவற விட்டு...
தேடல்களை
தேம்புதலோடே
மீட்டுகிறார்கள்
வாசற்படி மடிப்பில்!!

நக்குண்டு நாவிழந்து
நாதியற்ற நாடகத்தை
சுருட்டி வந்து...
அடர்ந்த வீட்டுக்குள்
கபடத்தை விதைக்கிறார்கள்...
இடம் மாறும்
மூன்றாம் சாமத்து
புன்னகையில்!!!

02.16.2016

## உச்சம் புதைத்து சிதைந்த சோதை!!!

சந்தன மணம் பரப்பி
சிந்தன வார்த்தையதைச்
சொரிந்து...
செழித்துப் போன
நெஞ்சமதில்
இன்பத் தேனூற்றி வார்க்கையில்
அசந்து போனது வார்த்தை!!

கசந்த ஆடையதை
கச்சிதமாய்ச் சுருட்டி...
குச்சி வீட்டு
ஜன்னல் முகப்பில் உலர்த்தி...
ஆட்டை போட்ட பெருமிதத்தில்
கடல் கடந்து தவமிருக்கிறது
கானல் தொட்ட வரவில்!!

உச்சம் புதைத்து மச்சம் காட்டி
அவதிப் படுக்கையில்...
தலை நிமிர்த்தி
எட்டிப் பார்க்கையில்...
கெட்டியாகக் கட்டிப் பிடித்த
கனாக் கால மேகங்கள்...
மிதமாக வதையாகி
யாரிடமோ
தரிசனத்தைக் கேட்டு
கெஞ்சல்களை புரட்டியது!!

வானுயர்ந்த முகப்பை
முகமன் செய்து...
மலர்ச்சிக் குளியலாக்கி
பட்டோடு
ஒய்யாரி ராகம் புரிகையில்...
நாடோடியாக விசாலித்து
விசாரணைக் கூண்டில்
கூர்மம் செதுப்பி...
செதில் முனையில் முறுவலிக்கிறது
பாவை விளக்காகி பாசத்தோடு!!!

08.08.2015

## திக்கு முக்காடிய சூட்டுக் குழல்!!!

தெருமுனை
எப்போதும் போல்...
ஏப்பம் விட்டபடி
இருண்டு கிடக்கிறது...
இரத்தவாடையை இஷ்டப்படி
இழுத்துக் குடிக்கும்
சந்தோஷத்தில்!!

ஆனால்...
அங்கு யாருமே
அசைந்தாடி வந்த பாடில்லை...
நெடுஞ்சாலைகள் முழுவதும்
கிடங்குகள் வெட்டப்பட்டு
யார் யாரைத் தள்ளுவதென்ற...
சித்தாந்தத்தில் சிக்கி
திக்கு முக்காடித் துயில்கிறது!!

பாவம் அந்திமாலை நேரத்தில்
விறகுக் கட்டோடு
இல்லறம் விரைந்தவனுக்கு...
கழுத்தில் கத்தி வைத்து
உயிரை உறிஞ்சத் துடிக்கும்...
துவேசிகள் ஒன்றாய்க் கூடி
ஆராய்ச்சி மணி அடிக்கிறார்கள்!!

நிம்மதிக்காக சிம்மாசனம்
கேட்டுத் தொடர்ந்தவனுக்கு...
பரிதாபமாக
பதுங்குக் குழி வெட்டி...
முண்டங்களை விருந்து வைத்து
ஆசை மருந்து ஊட்டுகிறார்கள்...
மடிகின்ற நினைவோடு
தனிமையில் சுருண்டவனுக்கு
துவேசத்தை வித்தாக்கி
வதை முகாம் நடாத்தி...
வரமாக துவேசத்தை
வளமாக ஊதுகிறார்கள்!!

காலைக் கட்டி இழுத்து வந்து...
கையை மடித்து
சந்தியில் வைத்து...
தலையில் சூட்டுக்குழல் அப்பி...
வீராப்பு வார்த்தைகளைக் கொட்டி
சூடு வைப்பதில் புரியா வலியை
பாடமாய் புகட்டுகிறார்கள்
நாளங்கள் சிதிலமடைய!!!

06.03.2011

## கனவு காற்றோடு கலத்தல்!!!

ஆசைகளை மூட்டைகளாக
அடுக்கி வைத்து...
மன இரைச்சல்களை
கனதியாக காற்றோடு கலந்து...
தூது விட்டபடியே
ஓடியவன் ஓய்கிறான்
ஓட்டை வீட்டில்!!

கலவையாக மாறிய
கனவுகளை கப்பல் கட்டி
தனி சாம்ராஜ்யமே
நடாத்துகிறது இளமை...
அடிக்கடி ஆசையோடு
குடும்பம் நடாத்தி
உடைந்த எண்ணங்களோடே
உறைகிறது மிதமாக!!

நாளை நாளையென
ஆசைக்கனி சுவைப்பதை
அடைய முடியாமல்...
சட்டைப் பக்கட்டை
உற்று நோக்கியும்...
காசு மட்டும்
கரம் கிட்டாததால்...
சில்லறைகளோடே
தர்க்கிக்கிறது ஆசைகள்!!

கையிருப்பில்
கிட்டிய தாள்களோ...
விரல் வலைக்குள்
நீந்த முடியாமல்...
பக்கத்தில் வெட்டப்பட்ட
ஆசைக் குழிக்குள்
குவிகிறது...
அடிமைக் கயிறிழுத்து!!!

29.11.2015

## தவளைகளின் பாய்ச்சல்!!!

இப்போதெல்லாம்
தவளைகள் தயாளமாக
வீதியில் இறங்கி...
கனத்த குரலில்
சத்தங்களை எழுப்பிக்
குதூகலிக்கிறது!!

யாரிடம் கேட்டாலும்
ஒருமித்த வார்த்தைகளையே
ஒப்புவிப்பு செய்கிறார்கள்...
தவளைகள்
மாரி காலத்தில்
அதிகமதிகம் சினுங்கித்தான்
வேதனைகளை
இறக்கி வைக்குமென!!

மலிந்திருக்கும் மோக்கைகள்
மொக்குத்தனமாய் கத்துகையில்...
தேர்தல் காலத்தில்
அரசியல்வாதிகள்
முச்சந்தியில்
தோரணம் போட்டு...
கத்துவது ஞாபகத்தை
தொட்டுப் பார்க்கிறது!!

தவளைகள்
சந்து பொந்து பாராமல்
வயிறு நனைக்க
சந்திக்குப் படையெடுக்கையில்...
வாகனத்தில் அகப்பட்டு
உயிரை மாய்த்துக் கொள்வதும்...
பாமரனின் கால்களுக்குள்
மிதி பட்டும் சுயமிழக்கிறது!!

மழை இல்லத்தில்
தேங்கிக் கிடக்கும்
தவளைக் குஞ்சுகள்...
சீசனில் மட்டுமே பாய்ந்து
துள்ளிக் குதித்து...
வாக்குப் பிச்சை கேட்டு
அரசியல் புரிகிறது!!

தருணம் பார்த்து
நிறங்களை மாற்றி...
உரத்த குரலில்
ஓசைகளை எழுப்பி...
அதிசய வார்த்தைகளை
இறக்கி வாசிக்க...
அரசியல் தவளைகளுக்கே
அவசரமாய் முடிகிறது!!!

17.04.2015

## தொப்பித்தலை குரங்கும்
## சாரம் கட்டிய குண்டர்களும்!!!

நீண்ட அள்ளிருளில்
அவர்கள் எதையெதையோ
அள்ளிக் கொட்டிக் கொண்டிருந்தார்கள்...
சத்தம் மட்டும் காதை
இடித்துக் கொண்டு
ஏ.கே 47 போல
நெடுப்பமாய்க் கதறியது!!

கும்மிருட்டில் தெருவெல்லாம்
சன நடமாட்டம் சூழ...
ஆளுக்காள் எதையெதையோ
தூக்கிப் பிடித்துக் கொண்டு...
தப்பிப் பிழைப்பதாக நினைத்து
நொடிப் பொழுதில் பறந்தார்கள்!!

தொப்பித்தலை குரங்கும்
சாரம் மடித்துக் கட்டிய
குண்டர்களும்...
ஊருக்குள்
பெரிய பெரிய ஆயுதங்களோடு
அணி வகுத்து...
புன்னகை பூரிக்க
கூடு கலைத்து ஓடினார்கள்!!

நிறையப் பேரின் வீட்டில்
அழுகைக் குரல் மட்டும்
ஓங்கி ஒலித்தது...
இளைஞர்கள் பட்டாளம்
கம்பு தடியோடு
ஊர் முனையில்
காவல் காத்து
லாயிலாஹ்வை மொழிந்து
அலியாய் நின்றார்கள்!!

இன்னும் சிலர்கள்
மண்வெட்டி சவல்களோடு
கபுர் வெட்ட...
மைய்யத்துப்புட்டிக்கு
விரைந்தார்கள்
மொத்தமாக வளத்தாட்ட!!

ஊரே கூடிக் குளிப்பாட்டி
கபனிட்டு...
கூட்டாய் நின்று தொழுவித்து
நீண்ட குழிக்குள்
இரத்தம் கசியக்கசிய
மக்பராவில் அடக்கம் செய்து
ஊரே திரும்பியது சோகத்தில்!!

சின்னவர்கள்
ஊருக்குள் நடப்பது
யாதென்று தெரியாமல்...
உம்மாக்களின்
முந்தானையைப் பிடித்து
இத்தா இருந்தார்கள்....
வாப்பா எப்போது வருவாரென!!

நடுச்சாமம்
பாங்கொலி கேட்பதும்...
அனேகப்பேர்
மூட்டை முடிச்சோடு
நடுத்தெருவுக்கு ஓடுவதும்...
ஊர் விட்டு ஊர் பாய்வதுமாக
சலசலப்பில் மக்கள்...
பிணம் திண்ணிக் கழுகுகளால்
தவித்துக் கொண்டிருந்தார்கள்...
நாளைய புலர்வையெண்ணி!!!

08.08.2010

<u>அரும்பதங்கள்</u>

| | |
|---|---|
| லாயிலாஹ் | - வணக்கத்திற்குறிய நாயன் |
| அலி | - முஸ்லிம்களின் பெயர் (வீரர்) |
| கப்ர், மையத்துப்புட்டி, மக்பரா | - மரணித்தவரை அடக்குமிடம் |
| கபனிடல் | - மரணித்தவரை புடவையால் சுற்றுதல் |
| இத்தா | - மரணித்தவருக்காக மனைவி செய்யும் கடமை |
| பாங்கு | - தொழுகைக்கான அழைப்பு |

# மூப்பின் மீதான போராட்டம்!!!

காய்ந்த சருகாகவே
இளமை இடம் மாறி...
தேகத்தில் தேய்வுகளை
தயாளமாக
அறுவடை செய்கிறது!!

நடந்தவை அத்தனையும்
நினைப்பானில் மிஞ்சாது...
மறதியென்னும்
நெடுங்கயிற்றை விழுங்க...
நாதியற்ற வாழ்வு
அலைபாய்கையில்
நா கூடத் தட்டியது திட்டமாக!!

நாளை நாளையென
எட்டாத ஆசைகளை
தரிசித்துக் கொண்டதில்...
பணமேகம் கருமேகமாக
பருவத்தில் மிதக்கிறது!!

அடிக்கடி வைத்தியரை
தரிசிப்பதில்...
ஓய்ந்து போன ஓய்வூதியம்
காய்ந்து போகையில்...
யார்யாரையோ
தூக்கிப் பிடிக்க வைக்கிறது!!

இளமைக்குள் முதுமையது
முண்டியடித்துக் கொண்டதில்...
வாழ்தலே மூசாப்பாய்
வறண்டு கொள்கிறது!!!

08.01.2014

## வெளிச்சம் தேடிக் கருகிய சாமம்!!!

வானத்தைப் பிடித்து
பூமிக்கு தூக்கி வந்து
தள்ளிப் போட்டு
வேடிக்கை பார்க்கிறது கடல்...
மின்மினிப் பூச்சிகளை
தளர் நடையில் ஆகுதியாக்கி!!

யார் யாரோ குருட்டிரவில்
அகிம்சைகளை உடைத்து...
பிசாசுகளை பூமிக்குள்
தூக்கிப் போட்டது போல...
தூறலாகியது மழை!!

தத்தித்தடுமாறி அணுவும்
பிசுகாது பல்லிழித்து...
வெளிச்சம் தேடிக் கருகிய
சாமப் பொழுதில்
நீலமணியாக மின்னியது
மனச் சிறகு!!

கடல்நீரை சரக்குக்கப்பலில்
கட்டி இழுத்து வந்து...
ஊருக்குள் தள்ளி விட்டு
குச்சிக் குடிலை ஆட்ட...
மௌனத்தில் மயானமாகி
மனசு எறிகிறது ஆழமாக!!

கமக்காரர்கள் தலையில்
கை வைத்து நெஞ்சு தட்டி
தத்தித் தடுமாறித் துடித்து...
வடிக்கப்பட்ட பொட்டலங்களை
ஆய்ந்து கொண்டார்கள்...
யார் யாரின் சுமைகளை
இறக்கி வைப்பதென்று!!

பூமியின் புழுதி துடைத்து
மேனியைப் புதுப்பித்து
சதாவும் கழுவி...
மறுமண நாள் கேட்டு
துடித்துக்கொண்டது...
முதலிரவை நினைத்து!!!

24.08.2016

## முரட்டுப் பார்வை!!!

உந்தன்
முரட்டுப் பார்வையிலே
முட்டிமோதி...
எட்டிக் கடக்க எத்தனித்தேன்...
நீயோ
வேட்டையாடி
வாட்டி விட்டாய் வசமாக!!

கட்டி வந்த காகிதத்தை
ஓட்டையாலே
போட்டு விட்டேன்...
சிட்டாக ஓடி வந்து
சொட்டிப் போனாயே!!

மட்டைக்குள் – நீ
மடித்து வைத்து
நீட்டிய காகிதப் பூ
மொட்டையாக மாட்டியது...
பட்டியலாய் நான் கொடுத்த
பாச மடலது
பலமாகி நின்றதுவே!!

பட்டான நெஞ்சமது
பட்டமாய் பறக்கையிலே...
மொட்டான வாலிபமோ
மட்டமாய் மடிகிறது...
திட்டமாய் தட்டியது
எட்டாத காதலென!!

விட்டுக் கடக்கையிலே
நட்ட நடு ராத்திரியில்...
கட்டுக்கட்டாய்
கட்டிவைத்த கொப்பியதை
கட்டியணைக்கையில்...
பதவி பட்டம் தொட்டதாலே
கிட்டியது உன் வாசம்!!!

08.12.2013

## குடுவையில் கட்டப்பட்ட வாழ்வு!!!

குடுவையில் கட்டப்பட்ட
வலிகளைத் திறந்து...
ஆசைகளை மனசுக்குள்
சிறைப்படுத்தியதில்
சீதனப் பேய் மேய்ந்து
சிதைகிறது
பாவையின் வாழ்வு!!

தென்றல் காற்றை
யாசகம் கேட்டு...
வாழ்க்கைப் பாடங்களை
பிரட்ட முடியாமல்...
வெள்ளை நிழலுடனே
முட்டிமோதும் இசைவில்...
முகடு முகர்ந்து இளமையை
உறிஞ்சிக் குடிக்கிறது ஏழ்மை!!

பாவம்... பாவம்...
வஞ்சியின் நெஞ்சில்
நஞ்சை விதைத்து
வெஞ்சினம் தீர்க்கிறார்கள்
சீர்வரிசை கேட்டு...
வயசு வந்தும்
ஆண்குறி சுமக்காமல்
சுமை வண்டியாக
வேதனைகளை சுமக்கிறது
கலப்படமில்லா மேனி!!

ஊதியம் வாங்கி
வாழ்வின் இன்பங்களை
இச்சை தீர்க்க...
வீடுவீடாய் பாய்வதில்
அர்த்தமானியம் நிறைந்திருக்கிறது
ஆண் மகனுக்கு!!

பாவம் ஆண்மையை
ஆய்மை செய்து
ஆய்வை நகர்த்துங்கள்
ஆண் மகன் வாழ...
பாவையவள் நிம்மதிக்காக
பக்கத்தில் படுத்துறங்கட்டும்!!!

05.04.2011

## புத்தி ததும்பிய முக்கால் மூளை!!!

புதுப்புது வார்த்தைகளை
தெருவில் தூக்கிப் போட்டு...
தன் பாட்டில்
நடந்து கொண்டிருந்தான்...
அழுக்குப்படிந்த சட்டையோடும்
பரட்டைத் தலையோடும்!!

குப்பை கூழங்களைக் கிண்டி
பக்கட்டில் அடைத்து...
சின்னப் பிள்ளைத் தனமாக
காகிதப்பூ பிய்த்து...
சவரம் செய்யப்படாத முகத்தில்
புதைத்து புலம்புகிறான்!!

பக்கவாட்டில் கிடந்த
பொம்மையை எடுத்து...
சிடு மூஞ்சோடு கதையளந்து...
தன் பாட்டில் தன்னுணர்வு தீர்த்து
தெருமுனையில் கூடிருப்போருக்கு
வேடிக்கையரங்கம் நடாத்தி
நடையை கட்டிக்கொண்டிருந்தான்!!

நீண்ட முடியோடும்
நீளாத கனவோடும்
உருவம்மாறி உருகுநிலையில்...
அபலையாக தெருவெல்லாம்
சிறகடித்துப் பறக்கிறான்
சித்தம் தொலைத்து!!

யாரோ போட்டுக்கழித்த
ஆடைகளை அணிவதும்...
சிலநேரம் அம்மணமாக
மாற்றுக் கிரகவாசியாகி...
வாயில்லா ஜீவன்களோடு
உறவு கொண்டாடுவதும்...
புதிரான புதிராகவே
தொடர்ந்து கொண்டது
புத்தி கொஞ்சம் ததும்பியதால்!!

20.08.2016

## கருத்துப்போன குருத்து மனம்!!!

இப்போதெல்லாம்
மனிதப் பட்சிகளின் மனசு...
வறண்ட பாலைவனமாகவே
வெடித்துச் சிதறி
வடிந்து கிடக்கிறது!!

கறித்துண்டங்களால்
வெள்ளைச்சுவரில்...
சிறுசுகளால் கிறுக்கப்பட்ட
கோடுகள் மாதிரி
மனசு கருகிக் கிடக்கிறது!!

நடுச்சாமத்தில்
அவனும்... அவளும்...
பேசிக்கொள்ளும்
புரியா மொழியில்...
உணர்வுகள் வதைபட்டு
ஊமையாக அழுகிறது!!

போத்தலில் அடைபட்ட
மனதெல்லாம் இப்போது...
மனிதத்தை தொலைத்து
புனிதத்தை விதைக்கிறது
வித்தியாசமாக விடைதேடி!!

கருத்துப்போன மனதுக்கு
மறுபடியும்... மறுபடியும்...
குருத்து மனதை ஒட்டி
வெள்ளைத் துணியாலே
துடைத்தெடுங்கள்
இதயம் வெளுக்க!!

நாளைய சிறுசுகள்
குருத்து மனதோடு
பூவுலகில் கால் நனைத்து...
குருத்து மணலில்
வீடு கட்டி
வசந்தங்களோடு வாழ...
எல்லோரும் சேர்ந்து
கட்டில் போட்டு வைப்போம்
அலாதியாக!!!

12.07.2015

## அள்ளிக்குத்திய மொட்டை வார்த்தைகள்!!!

பருத்திப்பூவாக
வார்த்தைகள் வெடித்து
அக்கம்பக்கமாகச் சிதற...
முகவரி தொலைத்த
ஏக்கத்தோடே சுற்றியதில்...
உறவுகள் கழண்டு
சாத்தானோடு
கோபித்துக் கொள்கிறது!!

புன்னகை தொலைத்த
தொல்லை வார்த்தைகளை
வானில் பரப்பி...
பாராயணம் செய்த
பாராட்டுப் பத்திரத்தில்...
மொட்டை வார்த்தைகளை
நவீனமாகப் புகுத்தி...
பழுதுபட்ட காயங்களுக்கு
ஒத்தடமிடுகிறார்கள்!!

நீண்ட வார்த்தைச் சீண்டல்களை
விடுப்பால் அடையாளம் காட்டி...
முதலைக் கண்ணீர் சிந்தி
அகிம்சைப் போராட்டம் நடாத்தியதில்
சுற்றிவெட்டல் பாடங்களை
கோர்வையாக்குகிறது காகிதம்!!

கம்பீரம் நிறைந்த நிறைமதியை
நிறைமொழியாலே நிரப்பி...
சிரட்டையாலே அள்ளிக்குத்த
ஆடம்பரத்தில் இடம்பெயர்த்தி
தூது விட்ட பாய்ச்சல் நிலத்தை
கொத்தி வைத்து
தாகம் தீர்க்கிறார்கள்
மொட்டை வார்த்தைகளால்!!!

14.05.2016

# தொலைதலின் ஆதிக்கம்!!!

வீங்கிப் புடைத்த வலிகளை
உடுக்கையால் வசீகரித்து...
சிகப்புத் தாளில்
வெள்ளனு கொண்டு...
வரைந்த பிரமிப்பில்
வசதியாக விரிகிறது எண்ணம்!!

கணவனின் சுடு சொல்லில்
உண்டான கண்ணீரில்...
குலைந்து பிசுபிசுப்பாக
ஏங்கித் தவிக்கும்
மனையாட்டியின்...
கிறுக்குத்தனத்தில் மிச்சமாக
புதைந்திருக்கிறது அன்பு!!

கடுமையான காத்திருப்பில்
அவள் மசக்கையாக
மாசக்கணக்கில் தவமிருந்து...
பித்துப் பிடித்தவளாக
வாந்தியைக் கொட்டுவதில்
ஆண்மகனென்ற வீராப்பு
அதிகம் ஆக்கிரமிக்கிறது!!

காக்கைக் கூண்டுக்குள்
முட்டையைப் பீய்ச்சி அடித்து
தன்னிறைவு கண்ட குயில்...
பாதிச் சுமைகளைச் சுமக்காமல்
அங்குமிங்கும் சிறகடித்து
தொலைவது கேள்வியே!!!

27.02.2014

## எண்ண அலையில் மோதல்!!!

குருட்டுச்சாயம்
பூசப்பட்ட இராத்திரியில்..
எண்ண அலைகள்
அங்குமிங்கும்
நீண்ட நினைவுகளோடு
நீந்திக் கொண்டிருந்தன!!

மாடிவீட்டு
குளிரூட்டப்பட்ட அறையில்...
நானும் பிள்ளைகளும்
பத்திரமாக
படுத்துறங்குவதாக!!

திடீரென்று
கண்பிதுங்கி
விழித்துப் பார்க்கையில்...
ஓலைக்குடிசையில்
அப்படியே
குப்புறக் கிடக்கிறேன்...
உடைந்த திண்ணையில்
வியர்வைக் கொப்புளங்களோடு!!!

11.02.2015

## நீயாகி நானாதல்!!!

துதிக்கையில் தூர்ந்த
தாரக மந்திரத்தை
தாமரைத் தட்டில் விரித்து...
நீயும் நானுமாக குருட்டிரவில்
மீட்டிய இதய ராகம்...
சிறகடித்துப் பறக்கிறது
சலனமில்லாமலே!!

காலை மாலையென நமக்குள்
கமகமக்கும் மணல் வெளியின்
மண் வாசனையை இச்சையாக்கி...
நிரம்பி ஓடும் குட்டையில்
மெல்லெனப் படமெடுத்து
சிலிர்க்கிறது கனவுச்சோலை!!

புனைந்து விட்ட சுவாரசியத்தை
விசித்திர விசாரிப்பில் புணர்த்தி...
வசீகரமாய் கன்னத்தைக் கடித்து
முறுவலித்த உதட்டை அச்சொட்டாக
படம் பிடித்த பம்மாத்தில்...
நீயாகி நானாதல்
விசாலித்திருக்கிறது...
தொடரங்க நாடகமாக
காலம் கனியும் மட்டும்!!!

28.11.2010

## குளறுபடியில் சிக்கிய வாழ்வு!!!

மறுத்துப் போன
காலங்களும்...
வெறுத்துப் போன
வாழ்வுகளும்...
வளமிழந்த வரவுகளும்...
இன்னுமின்னும்
அடுப்பங்கரையில்
அலாதியாகவே...
ஆட்டி வைக்கிறது!!

மரத்துப் போன
உறவுகள் ஒரு புறம்...
உரத்துப் போன
காலத்தின் வேதனை
மறுபக்கமுமாக
வாழ்வு கசந்து
மடிந்து கொள்கிறது!!

விடுதலையில்லா
அகதி வாழ்வும்...
விண்ணை விஞ்சும்
விலையேற்றமும்...
இன்னுமின்னும்
திண்டாட்டத்தில்
தவிக்க வைக்கிறது!!

நாளைய பொழுதுகளை
நினைப்பானில்
கணித்தாலும்...
உள்ளமது குளறுபடியில்
சிக்கித் தவித்து...
ஏக்கங்களை
ஏக்கர் கணக்கில்
நெஞ்சுக்குள் பதிக்கிறது!!

காலச்சக்கரமோ
கலகலப்பாய் களைகட்ட...
புதுப் பொழிவில் அமர்ந்து
வதைத்து விதைத்த
புலரும் நாளை நினைத்து
சினந்து கொள்கிறது
வாழ்வுக்கு வழி தேடி!!!

28.12.2015

## காற்றோட்டலின் முனக்கம்!!!

பெருவெள்ளம் பெருக்கெடுத்து
தெருமுனையை வசீகரிக்க...
குரோதத்தை அப்படியே
குழி தோண்டிப்  புதைத்து...
காட்டமாய் நடனமிடுகிறது
காற்றோட்டி மழை!!

குடிசைவாசிகளின் கிடுகை
நனைத்த யோக்கியத்தில்...
தன் வீராப்பு மந்திரத்தை
காணிக்குள் பீய்ச்சி அடித்து...
அடித்தட்டை ஆட்டுவிக்கிறது!!

வசை மொழியை வசமாக
உட்புற சுவரில் ஒட்டி வைத்து...
ஓய்வறையில் மறைந்த
ஓட்டை உடைவுகளை
ஒரே தரத்தில் சந்தைப்படுத்தி...
கூவிக்கூவி விற்றுத் தீர்த்த
பிரமிப்பில் ஒப்பனை புரிகிறது!!

சனனத்தை
சலிப்புக் குட்டையில்
பரப்பி வைத்து...
அகதி முத்திரைக்காக
அப்படியே அலைகிறது
விடியலைத் தொலைத்தபடி!!

வாழ்தல் சாதலென்ற காலத்தின்
நிம்மதிப் பெருமூச்சைத் தூசு தட்டி...
ஏழையின் ஒப்புதலை
கூட்டமாக இழுத்தடித்து...
முகாம்களுக்குள் முடக்கி
அதிசய ஆட்சேபனையில்
அடங்கிப் போகிறது!!!

04.03.2016

## முத்திப் பெருத்த மரம்!!!

பச்சை மணலில்
ஓங்கி உயர்ந்து
வளர்ந்த மரம்...
பூவோடும் காயோடும்
மரணப் படுக்கையில்
மல்லாந்து கிடக்கிறது!!

தலை நீட்டி
திமிராய் நின்ற மரம்
தரிசிக்க யாருமின்றி...
பூமியில்
குப்புறக் கிடக்கிறது!!

ஆணிவேர் அறுபட்டு
பக்கவேர் பிதுங்கி...
காய்ந்த மேனியோடு
அலங்கோலமாக
தெம்பிழந்து கிடக்கிறது!!

தேகமெல்லாம்
தேய்ந்து போக...
கவர்ச்சியோடிருந்த
பட்டையது நழுவி...
மேனி காட்டி
மொட்டையாகக் கிடக்கிறது!!

ஆண்டுகள் பல
கடந்த மரம்...
சரித்திரம் நிறைவாய்
சொன்ன மரம்...
கவனிக்க யாருமின்றி
தவித்துக் கிடக்கிறது...
வயது நீண்ட
பெற்றோரைப் போல!!!

26.08.2015

## ஆத்தோரக் குயில்கள்!!!

ஆத்தோரப் பக்கத்துல
அந்தி வெயில் நேரத்துல...
ஆத்தி உன்னப் பார்க்கையில
அப்படியே ஆடிப் போனன்
உந்தன் சின்னச் சிரிப்பால!!

சிலுக்குச் சட்டையோட – நீ
சின்னச் சின்ன நடை பயில
பக்குவமா வாடி மன...
உன்ட நெத்தியில
சுருண்டு வந்து
விழுகின்ற முடியழக
சீக்கிரமா ரசித்து விட...
சுண்டு விரலால
வாரிப்போடு புள்ள
பார்த்து நான் ரசிக்க!!

கண்ணால ஜாடை காட்டி
கலகலப்பா வாடி புள்ள...
பக்கத்து வீட்டுக்காரி
என்ன யாரெனக் கேட்டா...
உன்ட மாமா மகனென்று
மடக்கிப் போடு மன!!

பள்ளிக்கு நீ போக
உன்னைத் தேடி நானும் வர...
வெள்ளைச் சட்டையோட – நீ
வெடுக்கென நடக்கையில...
வெம்பி வெடித்த நானும்
உன்னை நினைச்சுக்கிட்டே
போறன்டி புள்ள
செத்த சவம் போல!!

ஆத்துப் பக்கம் பின்னேரம்
வாப்பாட பல்சர்ல
கண்டிப்பா நான் வருவன்
சொக்லேட்டும் தருவன்...
கதவுக்குள்ள நீ வந்து
கலகலப்பா
நாலு வார்த்த பேசு
தாவணி போட்ட தங்கமே!!

சத்தியமா கடைசி வர
உன்னப் பார்த்து நிற்பன்...
என்ட மனச தெரிஞ்சுக்கிட்டு
நாளைக்கு ஆத்தோரம்
அந்தி வெயில் நேரத்துல
நீயும் வாடி புள்ள!!!

31.12.2015

## பிரவாகமெடுத்து ஓடும் மௌனிகளின் வாசல்!!!

எங்கும்
பிரவாகமெடுத்து ஓடும்
அந்த
ஆறும் கடலும்....
இதுவரை
வற்றாத நிலத்தில்
குவிந்து திசைமாறிப்
பயணிக்கிறது!!

முடியாத முடிப்போடு
முடிச்சுகளை அடைத்து...
பத்துப் பக்க பக்குவத்தில்
புரட்டியெடுத்து...
சட்டக் கப்பலை
கர்ப்பமாக்கி...
நுகர்தல் பரப்பை
விசாலமாக்கி நகர்கிறது!!

புதினத்து ஓசையின்
நிசப்தங்களை
நிர்ணயப்படுத்தி...
வரங்களை வர்ணமாக்கி
மட்டற்ற புரிவில்
கூர்ம யாசனத்தில்
கரையேற்றியது!!

கூடிய வாசத்தில்
சூடிய பூக்களாக...
கழுத்தணியில் பிறக்கும்
மௌன வாசல்களை
இறக்கி வைத்து...
குருதிப் படியில்
வரமெடுக்கிறது!!

இதுவரை
ஆறும் கடலும்
ஆராதித்து நடாத்திய
சலங்கை ஒலி...
காதுகளை ஊடறுத்து
மௌனிகளை
தேடி ஓடியது வசமாக!!!

10.09.2017

## வசீகரமாகப் படர்ந்த வலிகள்!!!

வேதனை மூட்டைகளை
இறக்கி வைக்க...
யாரிடம் சொல்லுவதென
தெரியாமலேயே...
தட்டுத் தடுமாறி
தொங்கிக் கொள்கிறது
அலைக்கம்பம் அதீதமாக!!

தொலைந்து போன
ஆணவப் புன்முறுவல்...
விடியாத பொழுதில்
இடம்மாறிப் போகையில்...
வலிகள் நெஞ்சை
ஊடறுத்துப் பாய்ந்து...
ஞாபக மூட்டைகளை
சேமிக்கிறது வசமாக!!

வறண்டு கிடக்கும்
பாலைவனத் தரிசிப்பில்...
பச்சையாகப் படர்ந்து
சுயம்வரம் நடாத்தும்
ஒட்டக நகர்வுகளில்...
சுமைகளை இழுத்து
வசீகரமாக உரசியது!!

செத்த இதயம் பெருத்து
மறுத்த வேலிகளை
ஆட வைக்கையில்...
அசைவுகள் பசையாகி
பூசல்கள் அத்தனைக்கும்
முடிவுக் கயிறு போடும்!!!

09.08.2017

## புணர்தலின் கொடுமை!!!

அவளை அப்படியே
ஆரத் தழுவித் தீ மூட்டி...
விரல்களுக்குள்
சிறைப்படுத்தி இழுத்ததில்
எத்தனை... எத்தனை...
வலிகளும் சுமைகளும்
ஆட்டிப்படைக்கிறது!!

முசுப்பாத்தியாகக் கூடி
மூ பத்து நீட்டி...
அள்ளி வந்த
வெள்ளை உடம்பை...
இச்சை தீரும் மட்டும்
சுவைத்திட சம்மதித்த
நீ...
நெடுநாளாக
பின் தொடர்வதன்
மாயமென்னவோ!?!

மூலைக்குள் குந்தி
தனிமையைத் தேடி...
நெடுத்த உடம்புக்கு
சிவப்புச் சாயம் பூசி
பிடித்ததின் கொடுமை...
கெடுதலின் வலிமையாக
தொட்டுக் கொள்கிறது!!

வெள்ளை மேனியதில்
கண்ணை வைத்து
சுற்றியதாலோ...
தேகமதில் தேய்வுகளை
கட்டி வைத்து...
தொல்லைகளை
தொட்டு வைக்கிறாய்!!!

29.01.2016

# புழுதிக்காலில் சிறையுண்ட கனா!!!

புழுதி படிந்த மண்ணில்
புதைந்திருக்கும்
வெள்ளை நீரில்...
அள்ளுண்டு போனது
கனாக்கால வாழ்வு!!

அடைத்து வைத்த
பாச நதி நீண்டு...
வேசங்களைத் தள்ளி
இமயக்கொடிகளில் ஒட்டி
அத்தனை ஓட்டைகளையும்
மூடி வைத்து
நீந்தத் துடிக்கிறது!!

அளவில்லா அன்பில்
சிறைப்பட்ட காகிதங்கள்...
நீண்ட நாளின் பின்
கரத்தில் சினைப்பட்டு...
சுக மலர்களைப் பிரசவிக்க
தயார் நிலையில் சிதறி
தொங்கலில் குந்தியது!!

இருப்பு மட்டும்
இரண்டு சக்கரத்தில்
முறுக்கப்பட்டு...
வேதனையில் மோதி
மாயமான செய்திகளை
ஊதிப் பாய்ச்சியது
விசைப்பலகையின்
மூன்று முடிச்சில்!!

12.07.2017

## மூட்டை கட்டிய மேகம்!!!

இருளடித்த வானத்தை
உச்சி முகர்ந்து...
வெண்மையை விழுங்கி...
வாழ்க்கைப் புத்தகத்தை
புரட்ட முடியாமல்
தத்தளிக்கிறது வாழ்வு!!

உதிரும் உணர்வில்
படர்கொடி வெறுப்பில்...
ஆடித்திரிந்த மேகத்திடம்
மூட்டை கட்டிய பாசங்களை
இஷ்டப்படி ஒப்புவித்து...
சூடு சுரணையற்று பின்னால்
வேகமாக நகர்கிறது மேகம்!!

வானத்து ஓட்டைகளை
எப்படியும் உசுப்பேத்தி...
இரவை கடன் வாங்கி...
பழுதுபட்ட மனித வாழ்வில்
நிம்மதிச் சக்கரத்தை
நிர்ணயித்து அசைகிறது!!

சலசலப்பு நிறைந்த
ஓடை நீரைப் பருகி...
கருகிப்போன மேகத்திடம்
குளிர்ச்சி முகம் காட்டி...
கூனிக்குறுகி
கடன் கேட்கிறது பூமி!!

காய்ந்து கிடக்கும் நிலத்தின்
வயிறை விரித்து வைக்க...
சோவெனக் கொப்பளித்து...
கரிசனைப் பூக்களை
கொட்டுகிறது கருமேகம்
கமக்காரனின் சுமை தீர்க்க!!!

09.04.2012

## சந்தியில் குந்தும் பட்டாம்பூச்சிகள்!!!

அடர்ந்த குகைக்குள்
வண்ணாத்திகள்
சிறகடித்துப் பறக்கிறது...
வலிந்த மொழிகளை
விசாலமாக
சந்திக்குச் சந்தி
இறக்கி வைத்து!!

விசாலிக்காத வார்த்தைகளை
எல்லையின் பெருவெளியில்
சுருட்டி வைத்து கடக்கையில்...
வடிந்து போனது
சமரசமில்லா தொல்லை!!

அசதியில் கண்ணயர்ந்து
ஊர்ப் பக்கம் எட்டிப் பார்க்க
சந்திகளை கடக்கையில்...
நலிந்த மொட்டை
நெளிந்து கொள்கிறது...
இறக்கை வெடித்த
கரு வண்டு போல!!

நாளை
ஆராதனை செய்ய
தெருக்களில்
மொட்டை ஆயுதங்களோடும்...
பெரிய நெருப்பு முடிச்சோடும்...
அடாவடியாக வாருங்கள்
கூத்தடிப்போம்
பட்டாம்பூச்சிகள் தடுமாற!!!

24.05.2017



எம்.ரி.எம். யூனுஸின் கவிதைகள் எளிமையானவை ஆனால் வலிமையானவை. தன்னைச் சுற்றியுள்ள சூழலின் இருண்மைகளிலிருந்தும், ஒளிமைகளிலிருந்தும் நூற்களை ஒவ்வொன்றாய்ப் பொறுக்கி எடுத்து கவிதைகளை நெய்கின்றார். தன்னை பாதித்துச் செல்லுகின்ற நிகழ்வுகளின் புகைப்படத் தொகுப்புகளாக நம் கண் முன்னே காட்சிகள் காட்டி விரிகின்றன அவரது கவிதைகள். இஸங்களின் கவர்ச்சிகரமான மயக்கங்கள் பற்றி எது வித பிரக்ஞையுமின்றி தான் போகின்ற போக்கில் கவிதைகளோடு உரையாடுகின்ற யூனுஸின் மனோபக்குவம் நம் முன்னே ஒரு பெருங்கடலென விரிகையில் நுரைகளடங்கா அதன் பொறுமலில் அடங்காது அவர் நடந்து செல்லுகின்றார். கவிதைகள் பற்றி மட்டுமே யோசித்து, அது பற்றியே கவலைப்பட்டு, அது பற்றியே பரவசமடைகின்ற என்று நீளுகின்ற அவரது கவிதாவுலகம் கண்ணுக்குத் தெரியாத மரக்கிளையொன்றிலிருந்து கூவுகின்ற குயிலென எம்மோடு நெகிழ்ந்து இசைக்க ஆரம்பிக்கின்றது. எளிமையும் வலிமையுமென சொற்களைப் பதப்படுத்தி கடினமான பாதையிலிருந்து நம்மை திசை திருப்பி இலேசாக நடத்திச் செல்லுகின்ற யூனுஸின் கருணையில் இரக்கம் காட்டி நிற்கின்றன அவரது கவிதைகள்.

கிண்ணியா சபறுள்ளாஹ்

Cover Art: A.A. Mohamed Naashif

ISBN 978-955-0932-26-9

Rs. 300/-